பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆடி 22 | திங்கட்கிழமை | 07.08.2023 | கதிர் 269

### உள்ளூராட்சி, மாகாண தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்ட நிலையில்

# நாடாளுமன்ற, ஜனாதிபதி தேர்தல்கள் நடக்கும் என்கிற நம்பிக்கை இல்லை

### பவ்ரல் அமைப்பின் பணிப்பாளர் கடும் விமர்சனம்

உள்ளூராட்சி, மாகாண சபைத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் நாடாளுமன்ற மற்றும் ஜனாதிபதித் தேர்தல்கள் நடத்தப்படும் என்று கருதவில்லை என தேர்தல் கண்காணிப்பு நிறுவனமான பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

மக்களால்நாடாளுமன்றத்திற்குத்தெரிவு செய்யப்படும் மக்கள் பிரதிநிதிகள் மக்கள் கருத்துக்கு எதிராக நாடாளுமன்றத்தைத் தவறாகப் பயன்படுத்தித் தமது அரசியல் அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்ள முயற்சிக்கிறார்கள் என்றும் அவர் சாடினார்.

நிறைவேற்று அதிகாரம் (ஜனாதிபதி) தனதுதேவைக்கேற்பநாடாளுமன்றத்தைக் கையாள்வது போல் தோன்றுவதாகவும் நாடாளுமன்றத்தைக்கலைக்கும்அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ள நிலையில் அவர் அந்த அதிகாரத்தின் ஊடாக நாடாளுமன்றத்தை தமக்கு விரும்பியவாறு கையாள்கின்றார் எனவும் அவர் தெரிவித்தார்.

மார்ச் 12 இயக்கத்தின் கண்டி மாவட்ட மாநாட்டில் சனிக்கிழமை கலந்துகொண்டு உரையாற்றும் போதே நிறைவேற்றுப் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பஸில்ராஜபக்சவுக்கும்இடையில்கடைசியாக நடந்த சந்திபபு மிக மிக இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. எந்தவளவுக்கு இரகசியமாக என்றால், அண்ணன் மகிந்தவுக்கே தெரியாமல் பஸில் ரணிலைச் சந்திக்குமளவிற்கு இரகசியமாக இருந்தது.

வழக்கமாக ரணிலைச் சந்திப்பது என்றால் தனது மூத்த தமையனும் குடும்பத்தின் அரசியல் தலைவருமான மகிந்தவிடம் சொல்லி அனுமதி பெற்றபின்பே செல்வார். ஆனால் இந்தத் தடவை பஸிலைத் தவிர அவருக்கு மிக நெருக்கமான ஓரிருவருக்கு மட்டுமே இந்தச் சந்திப்பின் விவரம் தெரிந்திருந்தது.

சந்திப்பு ரணிலின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பு நடந்து முடியும் வரைக்கும் இது பற்றி மகிந்தவுக்கு எதுவும் தெரியாது. ஆனால் அவர் அரசியலில் பழம் தின்றி கொட்டை போட்ட நபரல்லவா, எனவே சந்திப்பு நடந்த சில மணி நேரத்திலேயே அவரது காதுகளுக்கு இருவரதும் சந்திப்புக் குறித்த செய்திஎட்டியது. உடனேபஸிலைஅழைத்து விவரம் கேட்காத மகிந்த, முதலில் சந்திப்பு நடந்தது உண்மைதானா என்பதை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்தார்,

ஜனாதிபதி செயலகம் மற்றும் ☞ 2

## தென்னையால் வீழ்ந்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

கிளிநொச்சி மாவட்டம், முழங்காவில் பகுதியில் நேற்றுக் காலை தென்னை மரத்திலிருந்து தவறி விழுந்த மூன்று பிள்ளைகளின் தந்தை சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் .

உயிரிழந்த முழங்காவில் கடற்கரை வீதியைச் சேர்ந்த குணராசா ஞானரூபனின் (வயது 46) உடல் கிளிநொச்சி வைத்தியசாலையில் கூறாய்வுகளுக்காக ஒப்படைக்கப்பட்டது. (113)

## ஏதாவது ஒரு தேர்தலாவது செப். 15க்கு முன் நடக்கும்

### மஹிந்த தேசப்பிரியவின் நம்பிக்கை இது

ஒத்திவைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் ஒன்று இந்த ஆண்டு செப்டெம்பர் 15, உலகஜனநாயகதினத்திற்கு முன்னர் நடத்தப்படும் எனத் தான் நம்புகிறார் என எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் நடத்தப்படாமை ஒரு நாட்டின் ஜனநாயகத்திற்கு பெரும் பிரச்சினையாகும் எனவும் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

இந்த வருடத்தில் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் ஒன் றையாவது நடத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்கள்கட்டுப்பாட்டின்றி, மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல், ஆளுநர்னர்கள், செயலாளர்கள், ஆணையர்கள் நடத்தும் இந்த ஆட்சி சட்டத்திற்குப் புறம்பானது என உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## வங்குரோத்துக்குக் காரணமானவர்கள்: சாட்சி பட்டியல் தயாரிக்க அறிவுறுத்து

### பல்கலை பொருளாதாரத்துறைத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டது

நாட்டின் வங்குரோத்து நிலைக்குக் காரணமான நிறுவனங்கள், தனிநபர்கள் மற்றும் அவர்களின் சார்பில் சாட்சியமளிக்கக்கூடிய நபர்களின் பட்டியலைத் தயாரிக்குமாறு இலங்கைப் பல்கலைக்கழகங்களின்பொருளாதாரத்துறைதலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனை, நாட்டின் வங்குரோத்து நிலைக்கான காரணங்களை கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற விசேட குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

இதன்படி, எதிர்காலத்தில் இவ்வாறானதொரு நிலைமை ஏற்படாமல் தடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் முன்னுரிமை ஆவணமொன்றை தயாரிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த அறிக்கையினை ஒரு வாரத்திற்குள் வழங்குமாறும் பல்கலைக்கழகங்களின் பொருளாதாரத்துறை தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நாட்டை வங்குரோத்து நிலைக்கு ☞ 2

## நிறைவேற்று ஜனாதிபதி முறைமை அடுத்த 10 ஆண்டுகளுக்கு தொடரும்

### சப்ரகமுவ மாகாண ஆளுநர் எதிர்வுகூறல்

அடுத்த பத்து ஆண்டுகளுக்கு ஐக்கிய தேசிய காட்சியின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் தலைமையிலேயே ஆட்சி தொடரும் என்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசநாயக்க தெரிவித்துள்ளார்

கொத்மலையில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தொகுதிகளை கூட்டத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைத்த 2 இலட்சத்து 40 ஆயிரம் வாக்குகளை மையப்படுத்தி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்திற்கு சென்றார்.

தனியெரு நபராகச் சென்றவர் தற்பொழுது ஜனாதிபதியாக உள்ளார் ☞ 2

## அடுத்த வருடம் முதல் ஆண்டுக்கு ஒரு பரீட்சை

### கல்வி அமைச்சர் அறிவிப்பு

2024ஆம்ஆண்டுமுதல் அனைத்துப் பாடசாலைகளிலும் ஆண்டுக்கு ஒருமுறை மாத்திரம் தவணை பரீட்சையினை நடத்துவதற்கு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இதுவரையான பாடசாலைகளில்வருடமொன்றுக்கு மூன்று தவணைகளில் பரீட்சைகள் நடத்தப்பட்டு வந்தன. பாடத்திட்டத்தின் அடிப்படையில் ஒவ்வொரு தவணைகளின் முடிவிலும் பரீட்சை நடத்தப்பட்டதுடன், ஒவ்வொருபாடத்திலும்மாணவர்களை பெற்ற புள்ளிகளுக்கமைய அவர்களின் நிலை தீர்மானிக்கப்பட்டது.

இறுதித் தவணை பரீட்சைக்குப் பின்னர் விடுமுறைவழங்கப்பட்டு,மீண்டும் மாணவர்களைப் புதிய வகுப்பிற்கு தரமுயர்த்தும் நடவடிக்கைகளே இதுவரை பாடசாலை கட்டமைப்பில் பின்பற்றப்பட்டுவந்தன.

இந்த நிலையிலே, பாடசாலை மாணவர்களுக்கான பாடத்திட்டம் மற்றும் பாடசாலையின் சுமையை குறைக்கும்வகையில்வருடத்திற்கு ஒருமுறை தவணைப் பரீட்சையை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத்தீர்மானமானது, அனைத்துபாடசாலைகளிலும் தரம் ஒன்று முதல் உயர்தரம் வரை அடுத்த வருடம் முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

### 37 வருடங்களின் பின்னர்

## சீரமைக்கப்படுகிறது மன்னார் பியர் துறை

### 1800 மில்லியன் செலவில்



37 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவின் ராமேஸ்வரத்திலிருந்து பயணிகள் கப்பல்கள் செல்வதற்கு வசதியாக தலைமன்னார் பியர் கப்பல்தளம் மீண்டும் மறுசீரமைக்கப்படவுள்ளது. துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சு இதற்குத் திட்டமிட்டுள்ளது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் கப்பல் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்பட்டு வந்த இந்தத்தளம், போரின்பின்னர் பயன்பாடின்றிக்கைவிடப்பட்டு அழிவடைந் ☞ 2

### சர்வதேச நாணய நிதியத்தின்

## நிபந்தனைகள் பலவற்றை கைவிடுகினற்து இலங்கை

சர்வதேசநாணயநிதியத்திற்கு இலங்கை ஆட்சியாளர்கள் வழங்கிய உறுதிமொழிகளில் சிலவற்றை இந்த ஆண்டு நிறைவேற்றுவதில்லை என்று ஆட்சியாளர்கள் முடிவுசெய்துள்ளனர். உறுதியளிக்கப்பட்ட சீர்திருத்தங்களை மேற்கொண்டால்அதுசமூகஅமைதியின்மை மற்றும் கிளர்ச்சிகளை ஏற்படுத்தலாம் என்பதால் இந்த முடிவு ஆளும் தரப்பால் எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இந்தச் சீர்திருத்தத்தத் திட்டங்களுக்கு அரசியல் மற்றும் பொதுமக்களின் ஆதரவு கிடைக்கவில்லை என்றும் ஆளும் தரப்புத் தெரிவிக்கின்றது. ஆளும் தரப்பிடம் அரசியல் பலம் இல்லாமை மற்றும் தேர்தல் நெருங்கும் காலம் ☞ 2

## மூன்று மாத தேவைக்குரிய மருந்துகளை அவசரமாக வாங்குவதற்கு நடவடிக்கை

பொது மருத்துவமனைகளில் நிலவும் கடுமையான மருந்துப் பற்றாக்குறையை நிவர்த்திக்க, அத்தியாவசிய மருந்துகள்மற்றும்மருத்துவப் பொருட்களை அவசரமாகக் கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கைகளைசுகாதார அமைச்சு மேற்கொண்டுள்ளது. உலக வங்கியின் நிதியுதவியுடன்கூடியசுகாதார அவசர நிதி வசதியின் கீழ் குறைந்தபட்சம்பதின்மூன்று கொள்முதல் கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் (AIIB) கீழ் நேரடியாக இதய நோய் சிகிச்சைப்பொருட்கள்மற்றும் பல் மருத்துவ பிரிவுகளுக்கான ஆறு கொள்முதல் கட்டளைகளும் இதில் அடக்கம்.

இவ்வாறான அவசர மருந்துக்கொள்வனவுகளை நிறுத்துவதாக சுகாதாரத் துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அறிவித்திருந்த போதும் இந்தக் கொள்முதல் கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளன.

கொள்முதல் கட்டளைகள் வழங்கப்பட்டுள்ள மருந்துகள் அடுத்த மூன்று மாதங்களுக்குப்பயன்படுத்தப் போதுமானது.

தரமான மருந்துகள் மற்றும் மருத்துவ சாதனங்களைக் கொள்முதல் செய்வதற்கான வெளிப்படையான திட்டத்தை வகுக்க, திறைசேரித் துணை செயலாளர் தலைமையில், ஐந்து பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவின் பரிசீலனை இன்றியே இந்தக் கொள்முதல் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

## பல பிளாஸ்டிக் பொருட்களுக்கு இரண்டு வாரங்களில் தடை வரும்

### அமைச்சர் நஸீர் அஹமட் அறிவிப்பு

ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் சில பிளாஸ்டிக் பொருட்கள், பிளாஸ்டிக் மாலைகள், ஒருமுறை பயன்படுத்தும்கரண்டிகள், முள்கரண்டிகள், தயிர் மற்றும் ஐஸ்கிரீம் கரண்டிகள், பிளாஸ்டிக் ஸ்ட்ரோக்கள், மற்றும் பிளாஸ்டிக் இடியப்பத் தட்டுகள் ஆகியவை அடுத்த இரண்டு வாரங்களுக்குள் தடைசெய்யப்படவுள்ளன என்று சுற்றாடல்துறை அமைசச்ர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

2023 ஐ.நா. காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டின் 28ஆவது கூட்டத்தில், பாதிக்கப்படக்கூடிய மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான காலநிலை நியாயமன்றத்தை இலங்கை தொடங்கத்தயாராக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

காலநிலை நீதியை உறுதிப்படுத்துதல், இழப்புகள் மற்றும் சேதங்களுக்கு நிதியளிப்பதை துரிதப்படுத்துவதற்கு பாரம்பரியமற்ற மாற்று அணுகுமுறையை பேணும் பொதுவான நோக்கத்துடன், காலநிலை நியாய மன்றம் ஒன்றை நிறுவுவதற்கு இலங்கை ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ஜனாதிபதி இல்லத்தில் தனக்கிருக்கும் செல்வாக்கைப் பயன்படுத்தி சந்திப்புநடந்தது என்பதை உறுதிப்படுத்திக் கொண்டார் மகிந்த. இந்தச் சந்திப்பு நீண்ட நேரம் இடம்பெற்றது. கிட்டத்தட்ட ஒன்றரை மணி நேரம் நீடித்தது. தேர்தல்களை எப்போது நடத்துவத, அமைச்சரவை நியமனம், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள், என்பன பற்றியெல்லாம் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பில், அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தலையும் நாடாளுமன்றத் தேர்தலையும்நடத்துவதற்குத்திட்டமிட்டிருப்பதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார் ஆனால் எந்தத் தேர்தலை முதலில் நடத்தப் போகின்றார் என்பதை அவர் தெளிவுபடுத்தவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை மொட்டுக் கட்சி ஆதரிப்பது தொடரிபிலும் இந்தப் பேச்சுக்களில் அலசப்பட்டது. ஆனால் அதற்குத் திட்டவட்டமானபதில் எதனையும் பஸில் வழங்கவில்லை. ஆனால் அந்தச் சந்திப்பின் பின்னர், ரணிலை ஆதரிப்பது என்பது மொட்டுக் கட்சியின் முடிவு அல்ல, அது சில அமைச்சர்களின் தனிப்பட்ட முடிவு என்ற விளக்கம் கட்சித் தரப்பால் வலியுறுத்தப்படத் தொடங்கியது.

அதன்மூலம்மொட்டுக்கட்சி அடுத்தஜனாதிபதித்தேர்தலில் ரணிலை ஆதரிப்பதற்கான வாய்ப்போமொட்டுவின்சார்பிலானஜனாதிபதிவேட்பாளராக ரணில் போட்டியிடும் வாய்ப்போ இல்லை என்பது மட்டும் தெளிவாகியது. இதனை அடுத்து கட்சிகளை உடைத்து அந்தத் தரப்புக்களை மீள ஒன்றிணைத்து புதிய அணி ஒன்றை உருவாக்கும் பணிகளைத் துரிதப்படுத்துமாறு நிமல் லன்ஸாஉள்ளிட்டவரிகளிடம் தெரிவித்தார் ஜனாதிபதி. இப்போது அந்தக் கூட்டணிக்கானபணிகள்தீவிரமாக இடம்பெறுகின்றன.

இருந்தாலும் புதிய கூட்டணியைக் கொண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றுவிடலாம் என்கிற ரணிலின் கனவு எவ்வளவு தூரம் சாத்தியப்படும் என்கிற கேள்வி அரசியல் வட்டாரங்களில் எழுப்பப்படுகின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## நாடாளுமன்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிப்பாளர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர்அங்கு மேலும் தெரிவித்தததாவது::

பொதுமக்கள் கருத்துக்கு எதிரான ஆட்சி நாடாளுமன்றத்தில் நடைபெறுகிறது. இந்தநாட்டின்அதிகாரம் நாடாளுமன்றத்திடமும், நிதி அதிகாரம் அரசமைப்பிலும் உள்ளது என்பதை ஒப்புக்கொள்ளும் ஜனாதிபதி, உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கு நாடாளுமன்றம்நிதிஒதுக்கிய போதும்நிதி அமைச்சர் என்ற முறையில் பணத்தைச் செலவு செய்யச் சந்தர்ப்பம் வழங்கவில்லை. கடைசி பட்ஜெட். நாடாளுமன்றத்தின் மேலாதிக்கம், நிதி அதிகாரம் பற்றி எப்போது வேண்டுமானாலும் பேசலாம், ஆனால் நடைமுறையில் தனது அரசியல் அதிகாரக் கட்டமைப்பிற்குத் தேவையான வகையில் நாடாளுமன்றத்தைக் கையாண்டு வருகிறார் ரணில். இவை பற்றி கேள்வி கேட்கும் இடத்திற்கு இந்நாட்டு குடிமக்கள் செல்லவேண்டும்.

ஒரு வாக்காளராக வாக்களிக்கும் பாத்திரத்தைத் தாண்டி, அரசியல்வாதியையும் அரச இயந்திரத்தையும் கேள்விக்குள்ளாக்குவதன் மூலம் தனது உரிமைகளுக்காக நிற்கும் ஒரு குடிமகனை உருவாக்குவதே எங்கள் நோக்கம். மக்கள் சக்தியே பிரதானம் என ஜனாதிபதி இரண்டு நாட்களுக்கு முன்னர் அறிவித்தார். இந்த நாட்டின் சட்டமன்றம் மிக முக்கியமானதுஎன்றும்அவர் கூறினார். இந்த முன்னணி சட்டமன்றத்திற்கு அதிகாரம் கொடுப்பது இந்த நாட்டின் குடிமக்கள்தான். எனவே, மமக்களைப்பலப்படுத்துவது நமது பொறுப்பு. ஒருபுறம், மக்களின் உரிமைகளைப் பயன்படுத்துகின்ற நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் மிக்க வரம்பைக் கொடுத்துவிட்டு, மறுபுறம் அந்த அதிகாரத்தை அவர்களுக்கு வழங்கும் வாக்குகளை குடிமகனிடமிருந்து பறித்துக் கொண்டிருக்கிறார்ஜனாதிபதி. மாகாணசபை, உள்ளூராட்சி தேர்தல்கள் மாத்திரமன்றி ஜனாதிபதி, நாடாளுமன்றத் தேர்தல்கள் கூட இன்று நிச்சயமற்றதாகமாறியுள்ளது.

லஞ்சம், ஊழல், வீண் விரயத்தால் நாடு இவ்வளவு பொருளாதார அதலபாதாளத்தில் வீழ்ந்தாலும், லஞ்சம், ஊழல், வீண் விரயமே இந்தத் தருணத்தில் தலைவிரித்தாடுகிறது. ஐநூறு ரூபாவுக்கு கிடைக்க வேண்டிய மாத்திரையை கண்டி தேசிய வைத்தியசாலை 5000 ரூபாவுக்கு கொள்வனவு செய்ததாக அண்மையில் ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. நாம் பெறும் வெளிநாட்டுக் கடன் உதவியில்இந்நாட்டுஅரசியல்வாதிகளும் அதிகாரிகளும் இன்னமும்இலஞ்சம்,கமிசன் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்றால் அது பாரதூரமான நிலை. பொதுமக்கள் கேள்வி கேட்காததால் அவர்களால் இவற்றை செய்ய முடிந்துள்ளது.

ஒரு நாட்டின் தேர்தல்களை ஆட்சியாளர் விரும்பும் நேரத்தில் நடத்தக்கூடாது, ஆனால் தேர்தல் வரைபடத்தின்படிநடத்தவேண்டும். அதுதான் உலகின் வளர்ந்த நாடுகளில்காணப்படும்நிலை. துரதிஷ்டவசமாக நம் நாட்டில் ஆட்சியாளர் விரும்பும் போதெல்லாம் தேர்தல் நடத்தப்படுகிறது. தேர்தல் ஆணையத்திற்கு தேர்தலை நடத்தசுதந்திரமானஅதிகாரம் இல்லை. தற்போது தேர்தல் ஆணையத்தில் மூன்று உறுப்பினர்கள் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர். மீதமுள்ள உறுப்பினர்களை நியமிக்க இதுவரை நிர்வாகிகள் நடவடிக்கை எடுக்கவில்லை. தேர்தல் நடத்துவதற்கு தேவையான நிதி சுதந்திரம் இந்த ஆணைக்குழுவிற்கு வழங்கப்படவில்லை.

ஆட்சியாளர் எப்போதாவது தேர்தலை நடத்துவது ஜனநாயகம் அல்ல. இந்த நாட்டின் தேர்தல் நாட்காட்டியைஅதிகாரத்தில்உள்ள கட்சியைவிடதனியொருவரே கையாண்டு வருவதை தற்போது காணமுடிகிறது. உள்ளூராட்சித் தேர்தலைப் போன்று மாகாண சபைத் தேர்தலும் இரத்துச் செய்யப்பட்ட நிலையில். நாடாளுமன்றத் தேர்தலோ, ஜனாதிபதித் தேர்தலோ உரிய நேரத்தில்நடத்தப்படும்என்று நாங்கள் நம்பவில்லை. இந்நாட்டு குடிமக்கள் ஒன்று திரண்டால்,ஆட்சியாளர்களால் தேர்தல் வரைபடத்தை அவர்கள்விரும்பியபடிமாற்ற முடியாது. ஆட்சியாளர்தனக்கு சாதகமாகத் தேர்தல் வரும் வரை தேர்தலை நடத்தாமல் இருப்பது ஜனநாயகத்திற்கு பெரும் அச்சுறுத்தலாகும்.

தேர்தலுக்குப் பணமில்லாத அரசு, மக்கள் தொகைக் கணக்கெடுப்புக்குசுமார் 300 கோடிரூபாய்செலவழிக்கிறது. அவர்கள் விரும்புவது இந்த நாட்டு மக்களை தேர்தல் வரை வாக்களிக்க விடாமல் இருக்கவேண்டும் என்பதே. நாடு இன்று ஏற்பட்டுள்ள நிலைக்கு தற்போதுநாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பெரும்பான்மையான உறுப்பினர்களே பொறுப்பேற்க வேண்டும்.

இந்தநாடாளுமன்றத்தில் 50 சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் 15 வருடங்களுக்கு மேலாக நாடாளுமன்றத்தைப்பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள். தற்போதைய ஜனாதிபதியின்நாடாளுமன்ற வாழ்க்கைக்கு40ஆண்டுகள். எதிர்க்கட்சித் தலைவரும் பல தசாப்தங்களாக நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்திவருகிறார். நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு இவர்களே பொறுப்புக் கூற வேண்டும் - என்றுள்ளது.

## வங்குரோத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு சென்ற உண்மைகள் மற்றும் அதற்கு காரணமானவர்கள்குழுவின் முன் கொண்டுவரப்பட்டு உண்மைகள் ஆராயப்படும் - என்றார் சாகர.

## நிறைவேற்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவருடைய முன்னோக்கிய செயற்பாடுகளுக்கு ஆளும் தரப்பின் ஒப்புழைப்புகள் கிடைக்கின்றன குறிப்பாக பொதுவான ஒத்துழைப்புகளை வழங்குகின்றன.

அது எவ்வாறாயினும் தற்போதுள்ள பிரச்சினை இறுதி நேரத்தில் காலை வாராது பொதுமக்கள் அவருக்கு வாக்களிக்கவேண்டும் என்பதாகும். எம்மைப்பொறுத்தவரையில் அவருடைய வெற்றியானது நாட்டின் எதிர்காலத்திற்கு மிகவும் முக்கியமானதாகும் ஆகவே ரணில் விக்கிரமசிங்கவை அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறச் செய்வது கடமையாகின்றது - என்றார்.

## சீரமைக்கப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது. தற்போது அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் பணிப்புரையின் கீழ், கப்பலை மீள நிர்மாணிக்கும் பொறுப்பு இலங்கை துறைமுக அதிகார சபைக்குவழங்கப்பட்டுள்ளது.

1,800மில்லியன்ரூபாய் செலவில் துறைமுகத்தின் புனரமைப்புப் பணிகள் இடம்பெறவுள்ளன. அத்தோடு துறைமுகத்தின் எல்லையில் உள்ளஅரசுக்குச்சொந்தமான சுமார் 10 ஏக்கர் நிலம் துறைமுக உள்கட்டமைப்பு மேம்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படும்.

இந்த புதிய அபிவிருத்திகளின் கீழ், நவீன பயணிகள் முனையம் மற்றும் சரக்குக் கிடங்கு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

தலைமன்னாருக்கும் தனுஷ்கோடிக்கும் இடையே முன்னர் பயணிகள் கப்பல் சேவை இடம்பெற்று வந்தது. ஆனால் சூறாவளியால் தனுஷ்கோடி துறைமுகம்முற்றிலும்அழிந்துபோய் விட்டது. இதனால் தற்போது இராமேஸ்வரம் துறைமுகத்தில் இருந்து தலைமன்னாருக்குப் பயணிகள் படகுச் சேவையை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டு வருகின்றது. அதற்கான அனுமதியையும் இந்தியஅரசுவழங்கியுள்ளது.

தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையில் படகுச் சேவை ஆரம்பிக்கப்படுவதன் மூலம் இலங்கை யாத்ரீகர்கள் இந்தியாவுக்குச் செல்வதற்கும் குறைந்த கட்டணத்தில் பயணவசதிகளைஏற்படுத்திக் கொடுப்பதற்கு வசதியாக அமையும் என அமைச்சர் வலியுறுத்தினார்.

மேலும், இந்த நடவடிக்கைகள் இரு நாடுகளுக்குமிடையிலான சரக்கு பரிமாற்றத்தை எளிதாக்குவதுடன், வட இலங்கை மக்களின் உற்பத்திகளை இந்தியாவில் பிரபலப்படுத்துவதற்கு வாய்ப்பாக அமையும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## நிபந்தனை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பவற்றையும் இலங்கை காரணமாகக் காட்டுகின்றது.

இலங்கையின் பொருளாதாரச் சரிவு மற்றும் நிதி நெருக்கடியிலிருந்துமீள்வதற்காக சர்வதேச நாணய நிதியத்தை நாடிய இலங்கை ஆளும் தரப்பு, நிதியத்தின் நிபந்தனைகளின்படி பல அரசநிறுவனங்களைமறுசீரமைப்பது உட்பட பல நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சாரசபைவீதிஅபிவிருத்தி அதிகார சபை உள்ளிட்ட 52 அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதாக இலங்கை வாக்குறுதியளித்திருந்தது.

சர்வதேச நாணய நிதியத்தின் கூற்றுப்படி, இலங்கை தொடர்ச்சியாக நான்குவருடங்கள்வருடாந்த இலக்குகளை எட்டினால் 2028 ஆம் ஆண்டளவில் 3.1% பொருளாதார வளர்ச்சியை அடைய முடியும். அன்னிய முதலீட்டு ஊக்குவிப்பு, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி துறை அரசு நிறுவனங்கள், துறைமுக விமான நிலையங்கள்மற்றும்விமான நிறுவனங்கள்ஆகியவற்றிலும் சீர்திருத்தங்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

## பல....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்மொழிந்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதிஊடகமையத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர்அங்குமேலும்தெரிவித்ததாவது:

தம்புள்ளை மற்றும் ஹிரிவடுன்ன ஆகியவற்றை சுற்றுச்சூழல் சுற்றுலாத் தலங்களாக அபிவிருத்தி செய்வது குறித்து இந்த ஆட்சி கவனம் செலுத்தி வருகிறது.

ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும்சிலபிளாஸ்டிக் பொருட்கள், பிளாஸ்டிக் மாலைகள், ஒருமுறைபயன்படுத்தும் கரண்டிகள், முள் கரண்டிகள், தயிர் மற்றும் ஐஸ்கிரீம் கரண்டிகள், பிளாஸ்டிக் ஸ்ட்ரோக்கள், மற்றும்பிளாஸ்டிக்இடியப்பத் தட்டுகள் ஆகியவை அடுத்த இரண்டு வாரங்களுக்குள் தடைசெய்யப்படவுள்ளன.

மத்தியசுற்றாடல்அதிகார சபையானதுநாட்டின்காற்றின் தரப்பாதுகாப்பு நிலையை அறிக்கை அளிப்பதற்கான அவசரகால பதில் செயல் திட்டம் ஒன்றை ஏற்கனவே தயாரித்துள்ளது.

மேலும், சுற்றாடல் அமைச்சு, மின்சாரம் மற்றும் இலத்திரனியல் கழிவு முகாமைத்துவம் தொடர்பான தேசிய கொள்கையை தயாரித்து வருகிறது.

புவிச்சரிதவியல்அளவை சுரங்கப் பணியகம், கனிம போக்குவரத்தை முறைமைப்படுத்தும் இலக்குடன், வாகன எண் மற்றும் வழித்தட விவரங்களுடன் கனிமப் போக்குவரத்து அனுமதிப் பத்திரங்களை வழங்கத் தொடங்கியுள்ளது.

இந்த விவரங்கள் அனைத்தும் கணினியில் உருவாக்கப்பட்டவை, இது அனுமதி பெற்றவரால் விவரங்கள் மாற்றப்படு வதைத் தடுக்கிறது. கனிமப்பொருட்களை சட்டவிரோதமாக கொண்டு செல்ல பயன்படுத்தப்படும் வாகனங்களை புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்தின் தரவுத்தளக்கட்டமைப்புமூலம் தடுப்புப்பட்டியலில் சேர்க்கும் நடைமுறையையும்அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது.


சுரங்கங்கள் மற்றும் கனிமச் சட்டத்தின் கீழ் ஒழுங்குமுறை திருத்தம் செய்யப்பட்டு, ஆய்வுஅனுமதி நடைமுறைக்குபுதியவிதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையில் உள்ள கனிம வளங்களில்முதலீட்டாளர்கள் நேரடியாக, தரகர்களின் தலையீடுஇல்லாமல்முதலீடு செய்வதற்குவசதியாகமேலும் புதிய ஏற்பாடுகள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன.

அந்தமுயற்சியைவெற்றியடையச் செய்வதற்காக, காலநிலை நியாய மன்றத்தை நிறுவுவதற்கான ஆதரவாளராக சுற்றாடல் அமைச்சு முன்வைத்த மூலோபாய திட்டத்தை செயல்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது

தேசியகாலநிலைமாற்றக் கொள்கையை உருவாக்குதல், தேசிய கனிமக் கொள்கையை உருவாக்குதல் , இலங்கைக்கான தேசிய குளிரூட்டும் கொள்கையை உருவாக்குதல் போன்ற பல்வேறு கொள்கைகளை தயாரிக்கும் பணி, இந்த ஆண்டு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் முக்கிய நடவடிக்கைகளாகும்.

கழிவு முகாமைத்துவத்தின் கீழ் பிளாஸ்டிக் பயன்பாடு மற்றும் மீள்சுழற்சிக்கும் புதிய விதிகளை அறிமுகப்படுத்தியுள்ளோம். மத்தியசுற்றாடல்அதிகாரசபை ஏற்கனவே விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு விதிகளை இதில் இணைத்துள்ளது - என்றார்.

# சொக்லெட்டுக்குள் கிடந்த விரலின் பகுதி





மஹியங்கனை வைத்தியசாலையில் பணிபுரியும் உத்தியோகத்தர் ஒருவர் உணவகம் ஒன்றில் இருந்து கொள்வனவு செய்த சொக்லேட் ஒன்றில் மனித விரலின் ஒரு பகுதியை கண்டெடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் சனிக்கிழமை இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மஹியங்கனை வைத்தியசாலையில் பணிபுரியும் உத்தியோகத்தர் ஒருவர் உணவகம் ஒன்றில் இருந்துகொள்வனவுசெய்தசொக்லேட்ஒன்றில்மனிதவிரலின் ஒரு பகுதியை கண்டெடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து அவர்கள் எதிர்வரும் திங்கட்கிழமைமஹியங்கனைநீதிவான்நீதிமன்றத்தில்உண்மைகளை அறிக்கையிட்டு சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளனர். மேலும் மஹியங்கனை சுகாதார வைத்திய அதிகாரி சஹன சமரவீரவின் ஆலோசனையின் பேரில் பொது சுகாதார பரிசோதகர் சர்மிந்த ரத்நாயக்க மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் குழு இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)






காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com




# நாட்டில் உணவு நெருக்கடி ஏற்பட்டால் எதிர்கொள்ள அரசு தயாராக உள்ளது

## விவசாய இராஜாங்க அமைச்சர் கூறுகிறார்



எதிர்காலத்தில் உணவு நெருக்கடி ஏற்படுமாயின் அதனை எதிர்கொள்ளும் வகையில் கைவிடப்பட்டுள்ள 11 ஆயிரம் ஏக்கர் நெல் வயல்களில் மீண்டும் பயிர்ச் செய்கையை ஆரம்பிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக விவசாய இராஜாங்க அமைச்சர் மொஹான் பிரியதர்ஷன டி சில்வா தெரிவித்தார்.

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக கைவிடப்பட்டுள்ள நெல் வயல்களில் மீண்டும் பயிரிடும் வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படுவதாகவும், இதற்காக அரசாங்கம் 42 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் மொஹான் பிரியதர்ஷன டி சில்வா - கடந்த காலங்களில் எமது நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியால் பெரிதும் பாதிக்கப்பட்ட ஒரு துறையாக விவசாயம் காணப்படுவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பதவியேற்றதன் பின்னர் படிப்படியாக இப்பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருகின்றன எனவும் அதற்கு நாம் அனைவரும் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்க வேண் டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

'இந்தியாவும் பாகிஸ்தானும் தற்போது அரிசி ஏற்றுமதியை தற்காலிகமாக இடைநிறுத்தி உள்ளன. எதிர்காலத்தில் ஏற்படக்கூடும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ள உலக உணவு நெருக்கடியை எதிர்கொள்ள அவர்கள் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளனர்.

எனவே, ஒரு நாடு என்ற வகையில், இந்த நெருக் கடியை எதிர்கொள்ள நாமும் தயாராக வேண்டும். நாட்டின் விவசாயத்துறையை மேம்படுத்துவதை அரசாங்கத்தால் மாத்திரம் செய்ய முடியாது. அதற்கு அனைவரின் ஆதரவும் அவசியம்.

அதன்படி, நாட்டில் கைவிடப்பட்டுள்ள வயல் நிலங்களில் மீண்டும் பயிர்ச் செய்கையை ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அந்த வகையில் சுமார் 11 ஆயிரம் ஏக்கர் வயல் நிலங்களில் பயிரிட எதிர் பார்த்துள்ளதாகவும், கமநல அபிவிருத்தித் திணைக்களம் இதற்கான பணிகளை மேற்கொண்டு வருவதோடு, இதற்காக அரசாங்கம் 42 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் அண்மையில் பிரதேச செயலாளர்கள் மற்றும் மாவட்ட செயலாளர்கள் ஊடாக நெல் கொள்வனவு செய்யப்பட்டதுடன் அதன் மூலம் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு அரிசி வழங்கப்பட்டதையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக நெல் கொள்வனவை இடைநிறுத்தியிருந்த நெல் சந்தைப்படுத்தல் சபை, ஜனாதிபதியின் பணிப்புரையின் பிரகாரம் மீண்டும் முறையான வழிமுறைகள் ஊடாக நெல் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், கொள்வனவு செய்யப்படும் நெல் கையிருப்பை களஞ்சியப்படுத்த நாடு பூராகவும் களஞ்சியசாலைகள் திறக்கப்பட்டுள்ளன எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் எமது நாட்டில் அரிசி மேலதிக கையிருப்பு இருந்ததாகவும் நாட்டில் ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகள் காரணமாக அந்நிலை வீழ்ச்சி அடைந்ததால் அரிசி இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் குறிப்பிட்ட அமைச்சர், இந்த வருடம் விளைச்சல் அதிகரித்துள்ளதால் மீண்டும் பழைய நிலைக்கு மீளலாம் என நம்பிக்கை தெரிவித்தார்.

எமது நாட்டின் பயன்பாட்டுக்கு சுமார் 24 லட்சம் மெற்றிக் தொன் அரிசி தேவைப்படுவதாகவும், அந்த வகையில் தற்போது முன்னெடுக்கப்படும் முறையான பொறிமுறைகளின் மூலம் எதிர்காலத்தில் எமது நாடு அரிசி உற்பத்தியில் தன்னிறைவு அடையும் என்று எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

மேலும், சோளம், உழுந்து, பயறு உள்ளிட்ட மேலதிக பயிர்களின் விளைச்சளை அதிகரிக்க விவசாய அமைச்சரின் ஆலோசனையின் பேரில் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் குறிப்பிட்ட அமைச்சர், குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உழுந்து, பயறு ஆகியவற்றைப் பயிரிடும் பணிகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதால் எதிர்காலத்தில் உழுந்து பயறு ஆகிய பயிர்களில் பற்றாக்குறை ஏற்படாது என்றும் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது இளைஞர்கள் படிப்படியாக விவசாயத்திலிருந்து விலகிவருவதாக சுட்டிக்காட்டிய அமைச்சர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வரவு செலவுத் திட்ட அறிக்கை உரையில் குறிப்பிட்டபடி, விவசாயத் துறைக்கு நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், விவசாயத் துறையில் இளைஞர் சமுதாயத்தை ஊக்குவிக்கும் நோக்கில் இளைஞர் தொழில் முனைவோர் விவசாய கிராமங்களை நிறுவும் திட்டம் முன்னெடுக்கப்படுவதாகவும் அதற்காக பயன்படுத்தப்படாத அரச காணிகளை இளைஞர்களுக்கு விவசாயத்திற்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் இதன் போது தெரிவித்தார்.

தேசிய விவசாயக் கொள்கையை திருத்தங்களுடன் தயாரிக்கும் பணி இறுதிக் கட்டத்தில் உள்ளது என்றும், இது எதிர்காலத்தில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்றும் தேசிய விவசாயக் கொள்கையின் ஊடாக இந்நாட்டின் விவசாயத் துறையின் முன்னேற்றத்திற்கு பாரியளவு பங்களிப்புச் செய்ய முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (05)

# அவசர மருந்துக் கொள்வனவை நிறுத்த அமைச்சர் நடவடிக்கை



இந்திய கடன் உதவியின் கீழ் எமக்கு 237 பில்லியன் ரூபா கிடைக்கப்பெற்றது. அதற்கமைவாக இது வரையில் 207 பில்லியன் ரூபாவை பயன்படுத்தியுள்ளோம்.

இறக்குமதி செய்யப்படும் நூற்றுக்கான மருந்துகளில் ஒரு மருந்து தரமற்றதாக இருக்கலாம். இருப்பினும் எதிர்வரும் சில மாதங்களுக்குள் அவசர மருந்து கொள்வனவை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

நாட்டில் சுகாதார துறையில் எழுந்துள்ள நெருக்கடி மற்றும் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கும் வகையில் கொழும்பில் சுகாதார அமைச்சு ஏற்பாடு செய்திருந்த விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் -

இந்திய கடன் உதவியின் கீழ் எமக்கு 237 பில்லியன் ரூபா கிடைக்கப்பெற்றது. அதற்கமைவாக இதுவரையில் 207 பில்லியன் ரூபாவை பயன்படுத்தியுள்ளோம். அந்த 207 பில்லியன் ரூபா வில் 600 இற்கும் அதிக வகையான மருந்துகளைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதில் 294 மருந்துகளைப் பெற்றுள்ளோம். உதாரணமாக 294 மருந்துகளை இறக்குமதி செய்யும் பட்சத்தில் அந்த மருந்துகளில் ஒரு மருந்து தரமற்றதாக இருக்கலாம். சற்று சிந்தித்துப் பாருங்கள்.

அந்த 294 மருந்துகளையும் பெற்றுக் கொள்ள முடியாமல் போகும் பட்சத்தில் நாடு பாரிய நெருக்கடிக்குள் விழுந்து இருக்கும்.

அவசர கொள்வனவு மற்றும் சாதாரண முறையில் கொள்வனவு செய்வது தொடர்பில் தற்போது பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. உதாரணமாக எடுத்துக் கொள்ளும்போது அரிசி, சீனி, மிளகாய் தூள் என்பவற்றுக்கு நாட்டில் தட்டுப்பாடு நிலவும் போது வர்த்தக அமைச் சருக்கு உடனடியாக இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளுக்கு செல்லலாம். அங்கு விநியோகஸ்தர்களை சந்தித்து விலைகளை பேசி தீர்மானித்து, அதன் பின்னர் 500 இற்கும் மேற்பட்ட கொள்கலன்கள் மூலம் அவற்றை இரண்டு வாரங்களுக்குள் இறக்குமதி செய்வதற்கு முடியும்.

இருப்பினும் மருந்துகளுக்கு அவ்வாறு செய்ய முடியாது. குறிப்பாக மருந்து ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு ஆரம்பத்திலிருந்து குறைந்தது 6 அல்லது 9 மாதங்கள் எடுக்கும்.

இந்தக் காலப்பகுதிக்குள் எமக்கு பல்வேறு பிரச்சினைகள் காணப்படும். நிதிப் பிரச்சினை அல்லது செலுத்த வேண்டிய கட்டணத்தை செலுத்த முடியாமல் போகலாம். இருப்பினும் இவற்றை விடுத்து மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு எமக்குள்ள வழியொன்று தான் அவசர மருந்து கொள்வனவு முறையாகும்.

என்னால் பொறுப்புணர்வுடன் கூறிக்கொள்ள முடியும். அவசர கொள்வனவு மற்றும் சாதாரண முறைப்படி கொள்வனவில் காலப்பகுதி மாத்திரமே வேறுபடும். இருப்பினும் கொள்வனவின் போது பின்பற்றப்படும் முறைகளில் எந்தவொரு மாற்றமும் ஏற்படாது.

விளம்பரப்படுத்த வேண்டும், விலைமனுக்கோரல் இடம்பெற வேண்டும், காலப்பகுதி குறிப்பிடப்பட வேண்டும். இருப்பினும் இறுதியில் காலப்பகுதியில் மாத்திரமே மாற்றம் நிகழும்.

அதை விடுத்து அவசர மருந்துக் கொள்வனவு எனும் போர்வையில் விலைமனு இன்றித் தமக்கு விரும்பிய தரப்பினர் மூலம் மருந்துகளை இறக்குமதி செய்ய அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனக் கூறுகின்றமை தவறாகும். அதை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. மேலும் எதிர்வரும் மாதங்களுக்குள் அவசர மருந்துக் கொள்வனவு நிறுத்தப்படும். - என்றார். (05)

# வர்த்தகர்களிடம் கொலை மிரட்டல் விடுத்து கப்பம் பெறும் இருவரைத் தேடும் பொலிஸ்

இலங்கை வர்த்தகர்களுக்குக் கொலைமிரட்டல் விடுத்து அவர்களிடமிருந்து கப்பம் பெறும் வலையமைப்பை இயக்கிய முக்கிய நபர்கள் கைது செய்யப்பட்டதையடுத்து, மேலும் இரு குற்றவாளிகள் வலையமைப்பு மீண்டும் செயற்படுவதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, இலங்கை வர்த்தகர்களுக்கு கொலைமிரட்டல் விடுத்து கோடிக்கணக்கில் கப்பம் கோரும் டுபாயில் பதுங்கியிருக்கும் திட்டமிட்ட குற்றவாளிகள் இருவர் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த இரு குற்றவாளிகளில் ஒருவர் மேல் மாகாணத்தில் வசிக்கும் வர்த்தகர்களுக்கு தொலைபேசியில் அழைப்பு விடுத்து கையாள்களை வைத்து கப்பம் கேட்பதாகவும் மற்றைய ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி தென் மாகாணத்தை மையமாகக் கொண்டு கப்பம் மற்றும் கொள்ளையில் ஈடுபட்டு வருவதாகவும் புலனாய்வு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கீழுள்ள கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் பிரிவினரும் இவர்கள் இருவர் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (05)

# ஊடகங்கள் மீது பழி சுமத்த அரசுக்கு உரிமையில்லை

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் காட்டம்



அரசாங்கத்தின் தன்னிச்சையான செயற்பாடுகளின் காரணமாகவே மக்களுக்கு வீதிக்கிறங்கி போராட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

அதற்கு ஊடகங்கள் மீது குற்றஞ்சுமத்துவது பொருத்தமற்றது. ஊடகங்கள் மீது பழி சுமத்துவதற்கு அரசாங்கத்துக்கு உரிமையும் இல்லை என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

ஊடகங்களாலேயே நாடு இந்த நிலைமையை அடைந்துள்ளதாக அமைச்சரொருவர் தெரிவித்துள்ளார். உரத்தட்டுப்பாடு ஏற்பட்டமையும், அத்தியாவசிய பொருள்களுக்கு வரிசையில் நிற்கவேண்டி ஏற்பட்டமையும் ஊடகங்களால் ஏற்பட்ட விளைவுகளா என அந்த அமைச்சரிடம் கேட்க விரும்புகின்றேன்.

தன்னிச்சையான அரசாங்கத்தின் செயற்பாடுகள் காரணமாகவே மக்களுக்கு வீதிக்கு இறங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. உள்நாட்டு கடன் மறுசீரமைப்புக்களை மேற்கொண்டு ஊழியர் சேமலாப நிதியத்தில் கைவைத்தது அரசாங்கமேயன்றி, ஊடகங்கள் அல்ல. இந்த அரசாங்கத்துக்கு ஊடகங்கள் மீது பழிசுமத்துவதற்கு எந்த உரிமையும் இல்லை.

ஆர்ப்பாட்டங்கள் வன்முறைகளாக வேண்டும் என்று நாம் கூறவில்லை. ஆனால் அமைதியான ஆர்ப்பாட்டங்களுக்கு இடமளிக்கப்பட வேண்டும். குளிரூட்டப்பட்ட அறைகளிலிருந்து கொண்டு, தீர்மானங்களை எடுத்து அதனை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுக்கு மக்களின் துயரம் எவ்வாறு புரியும்?

மக்களின் துயரத்தை நீக்குவது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டுமே தவிர, ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் ஊடகங்கள் மீது குற்றஞ் சுமத்துவதால் எந்த மாற்றமும் ஏற்படப்போவதில்லை. - என்றார். (05)

# பாலியல் துஷ்பிரயோகத்தின் பின் தங்க நகைகள், பணம் கொள்ளை

## வத்தளை பெண்ணுக்கு நேர்ந்த அவதி

வத்தளையைச் சேர்ந்த 42 வயதுடைய பெண்ணின் இடைநிறுத்தப்பட்டுள்ள வெளிநாட்டுக் கடவுச்சீட்டை மீளப் பெற்றுத் தருவதாகக் கூறி, குறித்த பெண்ணை இங்கிரிய பிரதேசத்துக்கு வரவழைத்து, காட்டுப் பகுதிக்கு அழைத்துச் சென்று பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தி 8 லட்சத்து 10 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான தங்க நகைகள் மற்றும் பணம் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் பதிவாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த இந்தப் பெண் வெளிநாட்டில் பணிபுரிந்துகொண்டிருந்த போது மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் விபசார நடவடிக்கை காரணமாக இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதனையடுத்து இடைநிறுத்தப்பட்ட வீசாவை மீளப் பெற்றுத் தருவதாகக் கூறி சந்தேக நபர் குறித்த பெண்ணை கையடக்கத் தொலைபேசியில் அழைத்து இங்கிரிய பிரதேசத்துக்கு வருமாறு கூறியுள்ளார்.

அதன் பின்னர் குறித்த பெண் அவரைச் சந்திப்பதற்காக இங்கிரிய பிரதேசத்துக்குச் சென்றுள்ளார்.

அதனை தொடர்ந்து, சந்தேக நபர், அந்தப் பெண்ணை சைக்கிளில் காட்டில் உள்ள ஒரு பகுதிக்கு அழைத்துச்சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்து தங்க நகைகள், பணத்தை கொள்ளையடித்தார் எனப் பொலிஸார் கூறுகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபரைக் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (05)

# உடவளவை விவசாயிகளின் கோரிக்கை நியாயமானதே

## வட்டக்கச்சி கமக்காரர் அமைப்பு தெரிவிப்பு

உடவளவை விவசாயிகளின் கோரிக்கை நியாயமானது. அரசாங்கம் தண்ணீரை வழங்க வேண்டும். எமக்கும் இந்த நிலை வரும் என அமைப்பின் செயலாளர் இ.இளங்குமரன் தெரிவித்துள்ளார். கிளிநொச்சியில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே குறித்த கருத்தை அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் -

ரணில் அரசாங்கம் மின்சாரத்;துக்காக 25 ஹெக்டேயர் நிலப்பரப்பில் பயிர் செய்த நெல்லுக்கு தண்ணீரை வழங்காது இருக்கின்றது. இதனால் 30 ஆயிரம் குடும்பங்களின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதாரம் பாதிக்கப்பட்டிருக்கிறது.

ரணில் அரசாங்கம் பாரிய பொருளாதாரக் குற்றத்தைச் செய்து வருகிறது. விவசாயிகள் மீது கையை வைத்த முன்னாள் ஜனாதிபதி கூட வீடு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது எனத் தெரிவித்தார். (05)

# தீயை அணைக்க முற்பட்டபோது ஆடையில் பரவியதால் பெண் சாவு

பொல்பிதிகம நாகொல்ல பிரதேசத்தில் பெண் ஒருவர் தீயில் சிக்கி உயிரிழந்துள்ளார். வீடு தீப்பற்றி எரிந்தபோது அருகில் இருந்த குப்பைகளும் தீப்பிடித்து எரிந்ததையடுத்து, தீயை அணைக்க முற்பட்ட போதே அவரது ஆடையில் தீப்பிடித்துள்ளதாக முதற்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கலபிடமட, பொல்பதிகம பிரதேசத்தை சேர்ந்த 70 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (05)

# 5 ஆயிரம் ரூபாவை இலஞ்சமாக கோரிய பொலிஸ் சார்ஜன்ட் பணி இடைநிறுத்தம்

பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட மோட்டார் சைக்கிள் மற்றும் அதன் ஆவணங்களை அதன் உரிமையாளரிடம் ஒப்படைப்பதற்காக 5,000 ரூபாவை இலஞ்சமாக கோரிய குற்றச்சாட்டின் பேரில் அக்மீமன பொலிஸில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளார். காலி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மேற்கொண்ட விசாரணையின் பின்னர், இந்த பொலிஸ் சார்ஜன்ட் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டார்.

மதுபோதையில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டு, அவரது மோட்டார் சைக்கிள் மற்றும் ஆவணங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. இந்த நபருக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்தாமல் மோட்டார் சைக்கிள் மற்றும் அதன் ஆவணங்களை மீள ஒப்படைக்க இந்த பொலிஸ் சார்ஜன்ட் ஐயாயிரம் ரூபாவை கோரியதாக தெரிய வந்ததையடுத்தே பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ரணில் மீதான விமர்சனங்கள் முற்றிலும் உண்மையானவையே

தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டு, மக்களின் வாக்குரிமை மறுக்கப்பட்டிருப்பது தொடர்பில் தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி கடுமையாக விமர்சித்திருக்கிறார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் தெரிவித்திருந்த, நிதியைக் கையாளும் அதிகாரம் நாடாளுமன்றத்திக்கு மட்டுமே உள்ளது என்கிற கருத்தை எள்ளி நகையாடியிருக்கும்அவர்உண்மைகளைஉடைத்துப்போட்டிருக்கின்றார்.

“பொதுமக்கள் கருத்துக்கு எதிரான ஆட்சி நாடாளுமன்றத்தில் நடைபெறுகிறது. இந்த நாட்டின் அதிகாரம் நாடாளுமன்றத்திடமும், நிதி அதிகாரம் அரசமைப்பிலும் உள்ளது என்பதை ஒப்புக் கொள்ளும் ஜனாதிபதி, உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு நாடா ளுமன்றம் நிதி ஒதுக்கிய போதும் நிதி அமைச்சர் என்ற முறையில் பணத்தைச் செலவு செய்யச் சந்தர்ப்பம் வழங்கவில்லை. கடைசி பட்ஜெட். நாடாளுமன்றத்தின் மேலாதிக்கம், நிதி அதிகாரம் பற்றி எப்போது வேண்டு மானாலும் பேசலாம், ஆனால் நடைமுறையில் தனது அரசியல் அதிகாரக் கட்டமைப்பிற்குத் தேவையான வகையில் நாடாளுமன்றத்தைக் கையாண்டு வருகிறார் ரணில். இவை பற்றி கேள்வி கேட்கும் இடத்திற்கு இந்நாட்டு குடிமக்கள் செல்லவேண்டும்.

மக்கள் சக்தியே பிரதானம் என ஜனாதிபதி இரண்டு நாட்களுக்கு முன்னர் அறிவித்தார். இந்த நாட்டின் சட்டமன்றம் மிக முக்கியமானது என்றும் அவர் கூறினார். இந்த முன்னணி சட்டமன்றத்திற்கு அதிகாரம் கொடுப்பது இந்த நாட்டின் குடிமக்கள்தான். எனவே, மமக்களைப் பலப்படுத்துவது நமது பொறுப்பு. ஒருபுறம், மக்களின் உரிமைகளைப் பயன்படுத்துகின்ற நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் மிக்க வரம்பைக் கொடுத்துவிட்டு, மறுபுறம் அந்த அதிகாரத்தை அவர்களுக்கு வழங்கும் வாக்குகளை குடிமகனிடமிருந்து பறித்துக்கொண்டிருக்கிறார் ஜனாதிபதி. மாகாணசபை, உள்ளூராட்சி தேர்தல்கள் மாத்திரமன்றி ஜனாதிபதி, நாடாளுமன்றத் தேர்தல்கள் கூட இன்று நிச்சயமற்றதாக மாறியுள்ளது.

ஒரு நாட்டின் தேர்தல்களை ஆட்சியாளர் விரும்பும் நேரத்தில் நடத்தக்கூடாது, ஆனால் தேர்தல் வரைபடத் தின்படி நடத்தவேண்டும். அதுதான் உலகின் வளர்ந்த நாடுகளில் காணப்படும் நிலை. துரதிஷ்டவசமாக நம் நாட்டில் ஆட்சியாளர் விரும்பும் போதெல்லாம் தேர்தல் நடத்தப்படுகிறது. தேர்தல் ஆணையத்திற்கு தேர்தலை நடத்த சுதந்திரமான அதிகாரம் இல்லை. தற்போது தேர்தல் ஆணையத்தில் மூன்று உறுப்பினர்கள் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர். மீதமுள்ள உறுப்பினர்களை நியமிக்க இதுவரை நிர்வாகிகள் நடவடிக்கை எடுக் கவில்லை. தேர்தல் நடத்துவதற்கு தேவையான நிதி சுதந் திரம் இந்த ஆணைக்குழுவிற்கு வழங்கப்படவில்லை.

ஆட்சியாளர் எப்போதாவது தேர்தலை நடத்துவது ஜனநாயகம் அல்ல. இந்த நாட்டின் தேர்தல் நாட்காட்டியை அதிகாரத்தில் உள்ள கட்சியைவிட தனியொருவரே கையாண்டு வருவதை தற்போது காணமுடிகிறது. உள்ளூராட்சித் தேர்தலைப் போன்று மாகாண சபைத் தேர்தலும் இரத்துச் செய்யப்பட்ட நிலையில். நாடாளு மன்றத் தேர்தலோ, ஜனாதிபதித் தேர்தலோ உரிய நேரத்தில் நடத்தப்படும் என்று நாங்கள் நம்பவில்லை’’ என்று தெரிவித்திருக்கிறார் ஹெட்டியாராச்சி.

அவரது கருத்துக்கள் யதார்த்தமானவை உண்மை யானவை. ரணில் விக்கிரமசிங்க கடந்த ஒரு வருட காலத்திற்கும் மேலாகத் தனது ஆட்சியில் செய்து வருபவற்றையே அவர் தெளிவுபடுத்தியிருக்கிறார். 2015ஆம் ஆண்டு ரணிலைப் பதவியில் அமர்த்துவதற்காகப் பாடுபட்ட அல்லது மறைமுகமாக உதவிய பொது அமைப்புக்களில் பவ்ரலுக்கும் முக்கிய பங்கு உண்டு. ரணிலை ஆட்சிக்குக் கொண்டுவருவதற்கு அன்று பவ்ரல் பாடுபட்டது. அந்த அமைப்பே இன்று ரணிலை ஜனநாயக விரோத சத்தி என்ற ரீதியில் வர்ணித்துள்ளது.

இந்நாட்டு குடிமக்கள் ஒன்று திரண்டால், ஆட்சியாளர்களால் தேர்தல் வரைபடத்தை அவர்கள் விரும்பியபடி மாற்ற முடியாது. ஆட்சியாளர் தனக்கு சாதகமாகத் தேர்தல் வரும் வரை தேர்தலை நடத்தாமல் இருப்பது ஜனநாயகத்திற்கு பெரும் அச்சுறுத்தலாகும் என்றும் ஹெட்டியாராச்சி தெரிவித்திருக்கிறார்.

தேர்தலுக்குப் பணமில்லாத அரசு, மக்கள் தொகைக் கணக்கெடுப்புக்கு சுமார் 300 கோடி ரூபாய் செலவழிக்கிறது. அவர்கள் விரும்புவது இந்த நாட்டு மக்களை தேர்தல் வரை வாக்களிக்க விடாமல் இருக்கவேண்டும் என்பதே என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார். இந்தக் கருத்துக்களாவது ஜனாதிபதிக்கு உறைக்குமா என்கிற கேள்வி இருக்கின்றது. கிடைத்திருக்கும் சந்த்ரப்பத்தைப் பயன்படுத்தி மீண்டும் அரசுத் தலைவராகும் வழி வகைகளைத் தேடுவதை விடுத்து நேர்மையான தலைவராக நடந்துகொள்வதற்கு ரணில் முயற்சிக்கவேண்டும். அதற்கு அவர் உடனடியாக உள்ளூராட்சி சபைகள் மற்றும் மாகாண சபைகள் தேர்தல்களை நடத்தவேண்டும்.

# தாய்வானில் கொட்டப்படும் அமெரிக்கா ஆயுதங்கள்

## பெரும் இராணுவ உதவியால் ஆத்திரமடையும் சீனா

ஐங்கரன் விக்கினேஸ்வரா



இராணுவ ஆக்கிரமிப்பு மூலமாக தாய்வானை கைப்பற்றுவோம் என்று அண்மையில் சீனா தெரிவித்துள்ள நிலையிலே, தாய்வானுக்கு அமெரிக்கா சுமார் 345 மில்லியன் டொலர் மதிப்பிலான இராணுவ உதவியினை வழங்க உள்ளதாக அறிவித்துள்ளது.

சீனா மற்றும் தாய்வான் இடையே 40 வருடங்களில் இல்லாத அளவு பதற்றம்நிலவுவதாகதற்போதுதாய்வான் தெரிவித்துள்ளது.

### தாய்வான் இறையாண்மை

தாய்வான் தன்னை ஒரு இறை யாண்மை உள்ள நாடாகத்தான் கருது கிறது. ஆனால் சீனா தாய்வானை தனது நாட்டிற்கு உட்பட்ட ஒரு பகுதி யாகவே பார்க்கிறது. வலுக்கட்டாய மாக தாய்வானை தனது நாட்டுடன் ஒன்று சேர்க்கும் வாய்ப்பு இருப்பதை சீனா நிராகரிக்கவில்லை. சீனா மற்றும் தாய்வான் இடையே உள்ள அதிகாரபூர்வ மற்ற எல்லையைக் கடப்பதைத் தாய் வான் ஊடுருவலாகத்தான் பார்க்கிறது. சீனா 2025ஆம் ஆண்டிற்குள் தாய்வானை முழுவதுமாக கைப்பற்றி விடும் என்ற அச்சமும் தற்போது எழுந்துள்ளது.

இந்த நிலையில் தாய்வானுக்கான அமெரிக்க ஆயுத உதவி பதற்றத்தை அதி



கரித்துள்ளது. தற்போதய அமெரிக்காவின் இராணுவ உதவியில் உளவுத்துறை, கண்காணிப்பு மற்றும் உளவு கருவிகள் மற்றும் சிறிய ஆயுத வெடிமருந்துகள் என்பன அடங்குவதாகவும், குறித்த உதவியை விரைவில் வழங்குவதாக வும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதன் மூலமாக, எதிர்காலத்தில் தன் நாட்டிற்கெதிராக நிகழ்த்தப்படும் இராணுவநடவடிக்கைகளைத்தாய்வான் தடுக்க முடியும் என அமெரிக்க இராணுவ அமைச்சகமான பென்டகன் தெரிவித்துள்ளது.

இதனாலேயே அமெரிக்கா இந்த இராணுவ உதவிகளை வழங்க உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் நீண்ட கால திட்டமிடலாக, சொந்த இராணுவ இருப்பை நிலைநிறுத்த ரஷ்யாவிற்கெதிரான, உக்ரைனின் போராட்டத்தின் போது அமெரிக்கா உக்ரைனிற்கு அவசரகால உதவியாக இராணுவ தளபாடங்களை வழங்கியது போலவே இப்போது தாய்வானிற்கும் உதவுகின்றது.

அமெரிக்க அதிபரின் ட்ரோடௌன் ஒதோறட்டி (drawdown authority) என்ற உத்தரவின் வாயிலாகவே அமெரிக்கா இந்த உதவியினை வழங்குகிறது. இந்த தளபாடங்கள் அனைத்தும் அமெரிக்காவின் சொந்த இருப்புகளிலிருந்து வழங்கப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கவிடயமாகும்.

கிழக்காசியாவிலுள்ள நாடுகளில் ஜனநாயக நாடாக விளங்குகின்ற தாய்வானை, தனது தேசத்தின் ஒரு பகுதியாக சீனா அறிவித்துள்ளது.

ஆனால் தாய்வான் இந்த முடிவை ஏற்கவில்லை. எதிர்க்கிறது.. இந்த நிலையில் தேவையேற்படின் இராணுவ ஆக்கிரமிப்பு மூலமாகக்கூட தாய்வானை கைப்பற்றுவோம் என்று சீனா கூறுகின்றது.

கடந்த ஆண்டு 2022இல் சீன இராணுவம் தாய்வானை சுற்றியுள்ள பகுதிகளில் இரு பெரிய இராணுவப் பயிற்சிகளை நடத்தியதன் போதே தாய்வான் தீவின் முற்றுகையும் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. இதன் காரணமாக இரு நாடுகளிற்கு இடையேயும் பதற்றமான சூழல் உருவாகியது.

### சீனாவில் இருந்து பிரிந்த தாய்வான்

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, சீனாவின் பிரதான நிலப்பகுதியில் தேசியவாத அரச படைகளுக்கும் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையிலான சண்டை நடந்தபோது, சீனா-தாய்வான் பிரிவு ஏற்பட்டது. மாவோ தலைமையில் கம்யூனிஸ்டுகள் 1949-ஆம் ஆண் டில் வெற்றி பெற்றனர். அவர்களுடைய தலைவரான மாவோ சேதுங் பெய்ஜிங்கில் ஆட்சியைக் கைப்பற்றினார். இதற்கிடையே, கோமின்டாங் என்று அறியப்பட்ட தேசியவாதக் கட்சி, தாய்வானுக்கு தப்பி ஓடியது.

தாய்வானுக்கு தப்பியோடிய பிறகு, சியாங்காய்-ஷேக் கோமின்டாங் கட்சியை வழிநடத்தினார்

தாய்வான் வரலாற்றின் குறிப்பிடத் தக்க காலத்திற்கு ஆட்சி செய்து வரும் கோமின்டாங், தாய்வானின் மிக முக்கியமான அரசியல் கட்சிகளில் ஒன்றாக இருந்து வருகிறது.

இப்போது, தாய்வானை இறை யாண்மை கொண்ட நாடாக வத்திக் கனும், வேறு 13 நாடுகளும் மட்டுமே அங்கீகரிக்கின்றன. தாய்வானை அங்கீகரிக்கக் கூடாது அல்லது அங் கீகாரத்தைக் குறிக்கக்கூடிய எதையும் செய்யக் கூடாது என்று சீனா மற்ற நாடுகள் மீது கணிசமான ராஜ்ஜீய ரீதியிலான அழுத்தங்களைச் செலுத்துகிறது.

### பொருளாதார வளர்ச்சியில் தாய்வான்

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தாய்வான் விரைவான பொருளாதார வளர்ச்சி மற்றும் தொழில் அனுபவம் காரணமாக ஒரு மேம்பட்ட தொழில்துறை பொருளாதார சக்தியாக வளர்ந்தது. தாய்வான் நான்கு ஆசிய புலிகள்’ எனப்படும் நாடுகளுள் ஒன்றாகவும் மற்றும் உலக வணிக அமைப்பு, ஆசிய பசுபிக் பொருளாதார அமைப்பிலும் உறுப்பினராக உள்ளது.

இது உலகின் 19 ஆவது பெரிய பொருளாதார நாடாகவும் அதன் மேம்பட்ட தொழில்நுட்ப துறை மூலம் உலக பொருளாதாரத்தில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும் தைவான் பத்திரிகை சுதந்திரம், சுகாதாரம், பொது கல்வி, பொருளாதார சுதந்திரம் மற்றும் மனித வளர்ச்சி ஆகியவற்றில் உயர்ந்த இடத்தில் உள்ளது.

### சுதந்திர நாடாக அறிவிக்குமா ?

அத்துடன் தனி அரசமைப்புச் சட்டம், ராணுவம், தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களைக் கொண்டிருப்பதால் தன்னை ஒரு தனி நாடாக தாய்வான் பறைசாற்றிக் கொள்கிறது. ஆயினும் தாய்வானை எளிதில் வீழ்த்தக் கூடிய பிராந்தியமாகப் பார்க்கிறது சீனா.

தாய்வான் அரசு, அந்த நாட்டை ஒரு சுதந்திர நாடாக ஒரு முறைப்படி அறிவிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டு வருவது குறித்து சீனா கண்டனம்கொண்டுள்ளதாகவல்லுநர்கள் கருதுகிறார்கள்.

தாய்வானில் கொட்டப்படும் அமெரிக்கா ஆயுதங்களால் சீனா பெரும் சினங்கொண்டுள்ளது.

இத்தகைய பெரும் இராணுவ உதவியால்அதிகரிக்கும்பதற்றசூழ்நிலை இலகுவில்தணியாது. உக்ரேனிய போர் முன்பாகவும் இத்தகைய படைபல விஸ்தரிப்பால் போர் மூண்டதும் அறிந்ததே.

**தாய்வான் தன்னை ஒரு இறை யாண்மை உள்ள நாடாகத்தான் கருது கிறது. ஆனால் சீனா தாய்வானை தனது நாட்டிற்கு உட்பட்ட ஒரு பகுதி யாகவே பார்க்கிறது. வலுக்கட்டாயமாக தாய்வானை தனது நாட்டுடன் ஒன்று சேர்க்கும் வாய்ப்பு இருப்பதை சீனா நிராகரிக்கவில்லை. சீனா மற்றும் தாய்வான் இடையே உள்ள அதிகாரபூர்வ மற்ற எல்லையைக் கடப்பதைத் தாய்வான் ஊடுருவலாகத்தான் பார்க்கிறது. சீனா 2025ஆம் ஆண்டிற்குள் தாய்வானை முழுவது மாக கைப்பற்றி விடும் என்ற அச்சமும் தற்போது எழுந்துள்ளது.**




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chiken Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swebpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# அரச மரத்தைக் கண்டாலே அஞ்சுகின்ற நிலைக்கு தமிழர்கள் தள்ளப்பட்டுள்ளனர்

## ஜோன் ஜிப்பிரிக்கோ தெரிவிப்பு



சட்டவிரோதமான முறையில் அடாத்தாக பறாளை முருகமூர்த்தி ஆலய தலவிருட்சமான அரசமரத்தை பௌத்த தொல்லியல் சின்னமாக பிரகடனப்படுத்தி இருப்பது கண்டனத்திற்குரியது என தமிழ் தேசியக்கூட்டமைப்பின் முன்னாள் மானிப்பாய் பிரதேசசபை உறுப்பினரும் வட்டுக்கோட்டை தொகுதி செயற்பாட்டாளருமான அருள்குமார் ஜோன் ஜிப் பிரிக்கோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

தமிழ் மக்களின் பண்டைக்கால வாழ்வியல் தொட்டு இயற்கை வழிபாட்டோடும் குறிப்பாகசைவசமய நம்பிக்கைவழிபாடுகளோடு தலவிருட்சங்களாகவணங்கி மதிப்பளிக்கப்பட்டுஇரண்டறக் கலந்திருந்த அரசமரத்தை இன்று தமிழர்கள் அல்லது தமிழ்சைவர்கள் கண்டாலே அஞ்சுகின்ற நிலையை இன்றுபௌத்தசிங்களபேரின வாதமும் வடக்கு, கிழக்குத் தமிழருக்குத் தொல்லை தரும் அமைப்பாக மாறியுள்ளஅதன்தொல்லியல் திணைக்களமும் உருவாக்கி உள்ளன.

ஏற்கனவே சங்கமித்தை வந்து இறங்கிய இடம் என குறிப்பிடப்பட்டு மாதகல் சம்பில்துறையில் பல பொது மக் களுக்கு சொந்தமான காணிகளை கடற்படையின் உதவியுடன் அடாத்தாக சுவீகரித்து பாரிய வழிபாட்டிடம்தங்குமிடங்களைஅமைத்துள்ளார்கள் தற்போது இது போதாது என்று சங்கமித்தையின் பேரால் சுழிபுரம் பறாளாய் முருக-மூர்த்தி ஆலய பழம்பெரும் தலவிருட்சமானஅரசமரத்தை கோவில் நிர்வாகத்திற்கோ உரிய பிரதேச அரசநிர்வாக அலகுகளிற்கோதெரிவிக்காது பொதுமக்களின் கருத்துக்களை பெறாமலும் உரிய ஆய்வுகள் இன்றியும் அவசர அவசரமாக பௌத்த தொல்லியல் சின்னமாக வர்த்தமானியில் பிரசுரித்து இருக்கின்றமை என்பது சைவ மதத்தின் பாரம்பரிய வழிபாட்டிடம் மீதான சமய ஒடுக்குமுறை என்பதோடு பௌத்தமத ஆக்கிரமிப்பு ஆகவே இருக்கிறது.

கலாசார அமைச்சினதும் தொல்லியல் திணைக்களத்தினதும் இந்த அடாவடி செயல் கடுமையான கண்டனத்திற்குரியது உடனடியாக இந்த வர்த்தமானி பிரசுரம் வாபஸ் பெறப்படவேண்டும்.

தமிழ் மக்களின் மத வழிபாட்டு சுதந்திரம் தொல்லியலின் பேரால் ஒடுக்குமு-றைக்குள்ளாக்கப்படுகின்ற குருந்தூர் மலை முதல் வெடுக்குநாறி இன்று பறளாய் எனத் தொடர்கின்ற கதைகள் நிறுத்தப்படவேண்டும் இதற்காக கட்சி பேதங் கள் இன்றி தமிழ் அரசியல் தலைமைகள் ஒன்றுபட்டு வெகுசன போராட்டங்களை ஒழுங்கமைப்பதோடு நாடாளுமன்றத்திலும் இதனை வெளிப்படுத்தி குரல் கொடுப்பதோடு இராசதந்திர மட்டங்களிலும் இதற்காக செயற்படவேண்டும் என தனது கண்டன அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (05)

# இந்தியாவுடன் செய்துள்ள ஒப்பந்தங்கள் நாட்டின் சுயாதீனத்துக்கு அச்சுறுத்தல்

## எச்சரிக்கிறார் துமிந்த நாகமுவகு




ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தியாவுடன் செய்-துகொண்டுள்ள திருட்டு ஒப்பந்தம் மூலம் நாட்டின் சுயாதீனத்துக்கு பாதிப்பாகும், இது தொடர்பாக எமது எதிர்ப்பு போராட்டங்களை நாடுபூராகவும் மேற்கொள்ள இருக்கிறோம் என மக்கள் போராட்ட அமைப்பின் அமைப்பாளர் துமிந்த நாகமுவ தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்திய விஜயத்தின்போது மேற்கொண்ட ஒப்பந்தங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்திய உயர் ஸ்தானிகர் காரியாலயத்துக்கு மகஜர்கையளிக்க சென்றபோது அங்கு மகஜர் ஏற்றுக்கொள்ளப்படாததால் அது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மக்கள் ஆணை இல்லாமல் இந்தியாவுக்கு சென்று திருட்டுத்தனமாக பல ஒப்பந்தங்களை செய்திருக்கிறார்.

இந்த திருட்டுத்தனமான ஒப்பந்தத்துக்கு நாங்கள் எமது எதிர்ப்பைத் தெரிவிக்கிறோம். இது தொடர்பான மகஜர் ஒன்றை இந்திஉயர்ஸ்தானிகர் காரியாலயத்துக்குகையளிக்க வந்தபோது, இவ்வாறு மஹஜர் ஏற்றுக்கொள்வதில்லை எனவும் வெளிவிவகார அமைச்சு ஊடாகவே மகஜர் ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த ஒப்பந்தங்களில் ஒன்றுதான் இந்தியா இலங்கைக்கு எரிபொருள் வழங்குவதற்கு எண்ணெய் குழாய் ஒன்றை ஏற் படுத்த அவர்கள் திட்டமிட்டிருக்கின்றனர்.

இந்தஎண்ணெய்குழாய் தற்போது எமக்கு கிடைத்திருக்கும் தகவல்களின் பிரகாரம் திருகோணமலைக்கே வருகிறது. திருகோணமலையில்இருந்துஒருகுழாயும் கொழும்பு துறைமுகத்துக்கு வருகிறது. அடுத்த குழாய் திருகோணமலை துறைமு-கத்துக்கு செல்கிறது. எண்ணெய்சந்தையில்இலங்கை, இந்தியாவுக்கு பாரிய எண்ணெய் சந்தையல்ல.

அப்படியென்றால் எரிபொருள் ஏகாதிபத்தியத்தை பெற்றுக்கொள்ளவே இந்தியா முயற்சிக்கிறது. அம்பாந்தோட்டைதுறைமு-கத்தில் கப்பல்களுக்கு எரிபொருள் ஏற்றும் அதிகாரத்தை சீனா எடுத்துக் கொண்டுள்ளது போன்று, கொழும்பு மற்றும் திருகோணமலை துறைமுகங்களில் அந்த அதிகாரத்தை இந்தியாபெற்றுக்கொள்ளவே திட்டமிட்டு வருகிறது.

அதேபோன்று இந்தியாவையும் இலங்கையையும் தரைவழியாக இணைக்கும் வகையில் மன்னாரில்ஒருபிரதேசத்தை அமைக்கவும் இந்தியாவில் இருந்து இலங்கை வரை மின்சாரம் விநியோகிக்கும் ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட்டிருக்கிறது.

இது இலங்கையின் எரிசக்தி சுயாதீனத்தன்மைக்கான அச்சுறுத்தலாகும். இதுபோன்றபலஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருக்கிறன. இந்த ஒப்பந்தங்கள் அனைத்தும் நாட்டின் பொருளாதாரத்தில் இந்தியாவின் செல்வாக்கை அதிகரிக்கும் வகையிலேயே இருக்கிறது.

எமது நாட்டின் பொருளாதார நெருக்கடியை பயன்படுத்திக்கொண்டு இந்தியா பொருளாதார கொள்ளை ஒன்றை மேற்கொள்ள முயற்சிக்கிறது.

அதனால்இதற்குஎதிராக நாங்கள் நாடுபூராகவும் எதிர்ப்பு போராட்டங்களை முன்னெடுக்க இருக்கிறோம். இந்தியா எமக்கு அண்மை நாடாக இருக்கலாம். அதற்காக இந்தியா எமக்கு பெரியண்ணன் அல்ல என்பதை இந்தியா தெரிந்துகொள்ள வேண்டும். இலங்கை சுயாதீன நாடு, சுயாதீன பொருளாதாரத்தைக்கொண்ட நாடு. அதனால் எமது சுயாதீ-னத்தில் கைவைக்க எந்த நாட்டுக்கும்உரிமைஇல்லை. - என்றார். (05)

# தனித்துவ டிஜிற்றல் தேசிய அடையாள அட்டை திட்டத்துக்கு முற்பணம் 45 கோடி இந்திய ரூபா









நாட்டில் டிஜிற்றல் மயமாக்கலின் அடிப்படை அடித்தளமான இலங்கை தனித்துவ டிஜிற்றல் அடையாள அட்டைத் திட்டத்தை துரிதமாக நடைமுறைப்படுத்தஇந்திய-இலங்கை திட்டக் கண்காணிப்பு குழு தீர்மானித்துள்ளது.

தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும்ஜனாதிபதிபணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, இந்தியஉயர்ஸ்தானிகர்கோபால்பாக்லே, இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் முதல் செயலாளர் எம். எல்டோஸ் மெதிவ், தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் பேராசிரியர் எம்.டி. குணவர்தன, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக்க, ஜனாதிபதி செயலக மேலதிக செயலாளர் கலாநிதி சுலக்ஷன ஜயவர்தன ஆகியோர் அடங்கிய இந்த மேற்பார்வைக் குழு ஜனாதிபதி அலுவலகத்தில் கூடி இது தொடர்பில் விரிவாக கலந்துரையாடியது.

இந்தத் திட்டத்தை நடைமு-றைப்படுத்துவது தொடர்பான கேள்விப்பத்திரம் தற்போது கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், உரிய கால வரையறையின்படிஅவைபரிசீலனை செய்யப்பட்டு வருவதாகவும் இங்கு குறிப்பிடப்பட்டது.

இதன்படி, இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக முற்பணமாக இத்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட தொகையில் 15 சதவீதமான, அதாவது 45 கோடி இந்தியரூபாபெறுமதியானகாசோலையை, இந்திய உயர்ஸ்தானிகர் இதன்போது தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத்திடம் கையளித்தார்.

உரிய கால வரையறைக்கமைய இந்தத்திட்டத்தைநடைமுறைப்படுத்துமாறும், வாரத்துக்கு ஒருமுறை கூடி அதன் முன்னேற்றத்தை மீளாய்வு செய்யுமாறும் சாகல ரத்நாயக்க, அதிகாரிகளுக்குபணிப்புரைவழங்கினார்.

இந்திய-இலங்கைஒத்துழைப்பின் கீழ் செயற்படுத்தப்படும் இந்தத் திட்டம், நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும்நடவடிக்கையில்மிகவும் முக்கியமானது எனத் தெரிவித்த சாகல ரத்நாயக்க, இதற்காக இந்திய அரசாங்கம்வழங்கும்ஆதரவுக்கு நன்றி தெரிவித்தார். (05)

# புத்தளத்தில் அதிகளவு யானைகள் நடமாட்டம்

புத்தளம் அநுராதபுரம் வீதியின் 6ம் கட்டைப் பகுதியில் சுமார் 30 இற்கும் அதிகமான யானைகள் வெள்ளிக்கிழமை மாலை சஞ்சரித்தன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வீதியால் செல்லும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டவர்கள் வாகனங்களை நிறுத்தி யானைகள் சஞ்சரிக்கும் அரிய வகைக் காட்சியை பார்வையிட்டனர்.

குறித்த காட்டு யானகள் இரவு நேரத்தில் வீதியைக் கடந்து கிராமங்களுக்குள் வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால்குறித்தபகுதியிலுள்ளமக்கள்இரவுவேலைகளில் வெளியில்செல்வதற்கு மிகவும் அச்சத்துக்கு மத்தியில் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக மக்கள் இதன்போது அச்சம் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# தெமட்டகொட சமிந்தவின் சகா பரிப்புவா மாட்டினார்

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான தெமட்டகொடசமிந்தவுக்குநெருக்கமான பரிப்புவா எனப்படும் மானவடுகேஅசங்கமதுரங்க, வெல்லம்பிட்டி கொட்டுவில பிரதேசத்தில்பொலிஸ்விசேட அதிரடிப்படையினரால்கூரிய ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சுற்றிவளைப்பில் அவரது நெருங்கிய சகாக்கள் இருவர் மற்றும் பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவிக்கின்றனர்.

விசேட அதிரடிப்படை ஸ்ரீஜயவர்தனபுர முகாமில் கடமையாற்றும் விசேட ஆயுதங்கள் மற்றும் தந்திரோபாய குழுவின் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சந்தேக நபர் கொலைக் குற்றச்சாட்டின் பேரில் தேடப்பட்டு வருபவர் என பொலிஸ்விசேடஅதிரடிப்படை மேலும்தெரிவித்துள்ளது.(05)

# இறந்த மீன்களை விற்பவர்களை கைதுசெய்வதற்கு நடவடிக்கை

கடும் வெயிலால் முல்லைத்தீவு மல்லாவி ஏரியில் லட்சக்கணக்கான மீன்கள் செத்து மடிந்துள்ளதால், அந்த மீன்களை பலர் சேகரித்து விற்பனை செய்யத் தொடங்கியுள்ளனர்.

மல்லாவி மக்கள் இறந்த மீன்களை சேகரித்து மிகக் குறைந்த விலைக்கு விற்பனை செய்ய ஆரம்பித்துள்ளதாகவும், எனவே உடனடியாக மீன்களை விற்பனை செய்ய பொலிஸார் அனுமதிக்கக் கூடாது எனவும் சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதன்படி, மல்லாவி குளத்தில் மீன் விற்பனை செய்பவர்களை கைது செய்ய பொலிஸார் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு சுகாதார அதிகாரிகள் மல்லாவி ஏரிக்கு சென்று மீன்கள் உயிரிழந்தமை தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன், முதற்கட்டமாக அதிகசூரியஒளியினால்மீன்கள்இவ்வாறுஉயிரிழந்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் ஊகிக்கின்றனர். இறந்த மீன்களின் மாதிரிகளை எடுத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயிரியல் பிரிவுக்கு அனுப்பி வைக்கும் வரை மல்லாவி ஏரியின் மீன்களை சாப்பிடுவதைத் தவிர்க்குமாறு சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் முல்லைத்தீவு விவசாயிகள் அமைப்பின் பிரதிநிதிகள், ஏரிகளின் நீர் மட்டம் தொடர்பில் மீன்பிடி விரிவாக்க உத்தியோகத்தர்கள் அக்கறை காட்டாது இலட்சக்கணக்கான மீன்களை ஏரிகளில் விடுவதால் இலட்சக்கணக்கான மீன்கள் செத்து மடிகின்றன எனத் தெரிவிக்கின்றனர்.

எனினும் மீன்கள் இறந்து கிடப்பதால் மல்லாவி குளத்தை சுற்றியுள்ள பகுதி முழுவதும் கடும் துர்நாற்றம் வீசத் தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினால் வாழ்வாதார உதவிகள் வழங்கல்






சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் புதிய நிர்வாக பதவியேற்பு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கழகத்தலைவர் லயன் க.டினேஷ் தலைமையில் நடைபெற்றது. கழகத்தின் புதிய தலைவராகவலி.வடக்குபிரதேசசபை முன்னாள் உறுப்பினர் லயன் செ.விஸ்ரீஜயராஜ் பதவியேற்றார்.

நிகழ்வில் பிரதமவிருந்தினராக அனைத்து மாவட்ட லயன்ஸ் கழகங்களின் முன்னாள் தலைவரும் நீர்கொழும்பு கோல்டன் ஸ்ரார் பீச் ஹோட்டலின் நிர்வாக இயக்குநருமாகிய லயன் தேவா டி பீற்றர் - லயன் ஜசிந்தா பீற்றர் ஆகியோரும், சிறப்பு விருந்தினராக லயன்ஸ் கழக ஆளுநர் சபை ஆலோசகரும், கொமர்சல்வங்கியின் முன்னாள் நிர்வாக இயக்குநருமாகிய லயன் சிவ.ரங்கநாதன் - லயன் கெலனி தம்பதிகளும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் சுன்னாகம் லயன்ஸ் கழகத்துக்கு அளப்பெரும் சேவை-யாற்றி அமரத்துவமடைந்த லயன் மகாதேவா - லயன் பூமாதேவி தம்பதிகளின் ஞாபகார்த்தமாக அவர்களது மகன் லயன் ம.பிருதிவிராஜின் அனுசரணையில் 5 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன. (05)


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
conditions apply*
இந்தியாவில் வேகமாக வளர்ந்து
வரும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

காலைக்கதிர் Kalaikkathir

# இந்த ஆண்டு இறுதிக்குள் மாகாண சபை தேர்தலை நடத்துவது பொருத்தமானது

## கலாநிதி தயான் ஜயதிலக்க 'அட்வைஸ்'



தற்போது அரசியலில் உள்ள தென்னிலங்கை முற்போக்கு சக்திகளும் எதிர்க்கட்சிகளும் வடக்கு, கிழக்கு அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து ஆண்டு இறுதிக்குள் மாகாணங்களுக்கான தேர்தலை நடத்துமாறு ஏகோபித்த கோரிக்கை விடுப்பதே பொருத்தமான நடைமுறையாகும்.

தவிர்த்து நடைமுறைச் சாத்தியமற்ற நிபந்தனைகளை முன்வைப்பது 13 ஆவது திருத்தச் சட்டத்தின் உள்ளீடுகளை இழக்கும் நிலைமைகளை உருவாக்கும் என்று இராஜதந்திரியும் அரசியல் விமர்சகருமான கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியாவுக்கானவிஜயம்,சர்வகட்சி மாநாடு, அத்துடன் 13 ஆவது திருத்த சட்டத்தில் உள்ள பொலிஸ் அதிகாரத்தை நீக்குவதற்கான தனிநபர் அரசமைப்பு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை ஆகிய தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

இந்த விடயங்கள் சம்பந்தமாக மேலும்தெரிவிக்கையில் -

இலங்கையில் நீண்ட வரலாற்றை கொண்டுள்ள தேசியபிரச்சினைக்கானதீர்வு விடயத்தில்கடந்தகாலஜனாதிபதிகள் பல்வேறு வாக்குறுதிகளைவழங்கிஇருக்கிறார்கள்.

ஆனால், அவை எந்தவொரு சந்தர்ப்பத்திலும்நடைமுறைப்படுத்தப்பட்டனவாக இல்லை. இவ்வாறானதொரு சூழலில் தற்பொழுது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13 ஆவது திருத்த சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பாக நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக அறிவித்திருக்கிறார்.

உண்மையில் தற்போதுள்ள யதார்த்த நிலைமையை புரிந்து கொள்ள வேண்டியதுஅவசியமாகிறது. நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலமானது ஜனாதிபதிதேர்தல் ஒன்றுக்கு முன்னதான வருடமாகும். அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் வருடமாகும்.

ஆகவே, இந்த காலப் பகுதிகளில் பிரதானமான விடயங்களை முன்நகர்த்துவதும் நடைமுறை சாத்தியமாகுவதும் மிகவும் கடினமான விடயமாகும்.

இவ்வாறான நிலையில் வடக்கு, கிழக்கு தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகள் உட்பட எதிர்கட்சிகள் நடைமுறை சாத்தியமான விடயத்தை வலியுறுத்துவது பொருத்தமானதாகும்.

அந்த வகையில் தற்போதைய அரசியல் சூழலையும் புரிந்துகொள்ள வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்கள் ஆணை பெற்று அதிகாரத்தில் உள்ள ஒருவர் அல்லர். அவர் தனிநபராக கூட மக்கள் ஆணை பெற்று நாடாளுமன்றத்திற்குவருகை தந்திருக்கும் நபரும் அல்லர். அவ்விதமான நிலையில் அவரால் பிரதானமான விடயங்களை முன்னெடுப்பதுசாத்தியமற்றதொன்றாகும்.

அதனடிப்படையில்அவர் இந்தியாவிற்கானவிஜயத்தை நிறைவு செய்துள்ளார். இந்த விஜயத்தின் போது திருகோணமலை நகரத்தை மையப்படுத்திய அபிவிருத்தி திட்டங்களில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதனைவிட தமிழ்நாட்டையும் வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைப்பதற்குரியமுதற்கட்ட நடவடிக்கைகளுக்கும்; இணக்கத்தை ஏற்படுத்தியுள்ளார்.

இந்தப் பின்னணியில் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு அவர் நடவடிக்கைகளை எடுப்பாராக இருந்தால் நிச்சயமாக தென்னிலங்கையில் அது பெரும் எதிர்ப்பு பிரசாரத்துக்கு வித்திடும். அது மட்டுமன்றி ஜனாதிபதி ரணில் அடுத்த தேர்தலில் போட்டியிடுவதற்கு விருப்பைக் கொண்டிருக்கையில் சவால்கள் அதிகமுள்ள விவகாரத்தை முழுமையாக முன்னெடுக்க முனைவது தனது வாக்குவங்கி அரசிலுக்கு பின்னடைவாக அமையும்என்பதிலும்கவனத்தைக் கொண்டிருப்பார்.

ஆகவே தற்போதைய சூழலில் நடைமுறைச் சாத்தியமான விடயத்தை முன்வைப்பதே பொருத்தமான அணுகு முறையாகும். குறிப்பாக மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் சம்பந்தமாக நிபந்தனைகள்விதிப்பதைவிடுத்து அவற்றுக்கான தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதியை வலியுறுத்துவதே பொருத்தமானதாகும்.

மாகாணங்களுக்குரிய மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்குரிய வழியை முதலில் உறுதிப்படுத்திக் கொள்வதோடு இந்த ஆண்டு இறுதிக்குள் தேர்தலை நடத்துமாறு எதிர்க்கட்சிகள் தென்னிலங்கை முற்போக்கு சக்திகள் மற்றும் வடக்கு, கிழக்கு அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து அழுத்தங்களைப் பிரயோகித்து அதில் வெற்றியடைவதே பொருத்தமான அணுகு முறையாக இருக்கும்.

அதனை விடுத்து காணி, பொலிஸ் அதிகாரங்கள் சம்பந்தமாக நிபந்தனைகளை விதிப்பதும் 13 இற்கு அப்பால் செல்வது பற்றி உரையாடுவதும் இருப்பதையும் பறிகொடுப்பதற்கான நிலைமைகளையே தோற்றுவிக்கும்.

தற்போது 13 ஆவது திருத்தச்சட்டத்தில்காணப்படும் பொலிஸ் அதிகாரத்தை நீக்குமாறு அரசமைப்புதிருத்த தனிநபர் பிரேரணையை முன்வைத்திருக்கின்றார். இத்தனிநபர் பிரேரணை சம்பந்தமாக பல்வேறு கருத்துக்கள் இருந்தாலும் தமிழ் அரசியல் கட்சிகள் தொடர்ச்சியாக பொலிஸ், காணி அதிகாரம், சமஷ்டி கோரிக்கை என்பவற்றை முன்வைத்துச்செல்வதானது தென்னிலங்கையில் உள்ள எதிர்ப்புச்சக்திகள் வலுவடைவதற்கேவழிசமைக்கும். அந்த நிலைமை, சில அரசியல் சக்திகள் ஒன்றிணைந்து 13 இல் உள்ள பொலிஸ் அதிகாரம் உள்ளிட்டவற்றை நாடாளுமன்றத்தின் ஊடாக நீக்குவதற்கான சூழலைக்கூட உருவாக்கி விடும்.

அவ்விதமான நிலைமை ஏற்படுமாயின் அதிகாரப்பகிர்வுக்கான அடிப்படை விடயங்களையே இழக்க நேரிடும். அதனை மையப்படுத்தியேஇந்தவிடயத்தில் நகர்வுகளைச் செய்வதே முக்கியமானதாகும்.-என்றார். (05)

# சாரதிகளின் தவறுகளை கண்டறியும் புது செயலி

*சாரதிகள் செய்யும் தவறுகளை தெரிவிப்பதற்காக விசேட செயலி ஒன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.*

*அதன் மூலம் சாரதிகள் செய்யும் தவறுகளைநேரடியாகபயணிகள்முன்வைக்க முடியும் என விபத்து விசாரணை முகாமையாளர் எரந்த பெரேரா தெரிவித்தார்.*

*இதேவேளை, சாரதிகள் செய்யும் தவறுகளை ஆவணப்படுத்தும் வகையில் சாரதியின் சோதனை புத்தகத்தை அறிமுகப்படுத்தவும் இலங்கை போக்குவரத்து சபை தீர்மானித்துள்ளது.*

*இதேவேளை, இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான சுமார் 218 பஸ் விபத்துக்கள் இந்த வருடத்தில் இடம்பெற்றுள்ளன. இதில் 19 பேர் உயிரிழந்துள்ளனர் என எரந்த பெரேரா குறிப்பிட்டுள்ளார்.*

*(05)*




# உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்க யாழ். நகரில் விழிப்புணர்வு நடை

உள்ளூர் உற்பத்திகளை பெறுமதி சேர்க்கை ஊடாக மதிப்புகூட்டும் வகையிலான விழிப்புணர்வை சமூக மட்டத்தில் உருவாக்கும் வகையில் 'ஈ-குருவி நடை 2023' என்ற நடைபவனி நேற்று காலை 6.30 மணி முதல் 9.30 மணி வரை நடைபெற்றது.

யாழ்ப்பாணபொதுநூலக முன்றலில் தொடங்கிய நடை பவனி, வைத்தியசாலை



வீதியூடாக சத்திர சந்தியினை அடைந்து, அங்கிருந்து கோட்டை சுற்றுவட்ட வீதியூடாக மீண்டும் பொது நூலகத்தினை வந்தடைந்து முடிவுற்றது.

உடல் உள ஆரோக்கியத்தை மேம்மடுத்த ஒவ்வொரு நாளும் 10,000 காலடிகள் நடப்பதே சிறந்தது என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், உள்நாட்டில் உற்பத்திசெய்யப்படும்பொருட்களில் மதிப்பு கூட்டுவதற்கான ஆதரவை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக்கொண்டு இந்த நடை ஏற்பாடு செய்யப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

ஈ-குருவி நடையானது கடந்த 2020ஆம் ஆண்டு முதல் கனடா மற்றும் இலங்கையில் சமூகம் சார்ந்த விழிப்புணர்வினை மேற்கொள்ளும் நடையின் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.









# 13 தொடர்பாக அரசின் இறுதித் திட்டம் என்ன?

## ரஞ்சித் மத்தும பண்டார கேள்வி



13ஆவது திருத்தச் சட்டம் சம்பந்தமாக அரசியல் கட்சிகளின் யோசனையை கோரியுள்ள அரசாங்கத்தின் திட்டம் என்னவென்று ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி எழுப்பியுள்ளது.

13 ஆவது திருத்தச் சட்டம் சம்பந்தமாக எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக அரசியல் கட்சிகள்தமதுபரிந்துரைகளை முன்மொழிவுகளையும் முன்வைக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் கட்சிகளுக்கு அறிவித்துள்ளார்.

குறித்த அறிவிப்புக்கு பதிலளிக்கும்போதே ஐக்கிய மக்கள்சக்திமேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் காட்சியினுடைய பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார -

13ஆவதுதிருத்தச்சட்டம் சம்பந்தமாக அரசாங்கம் அரசியல் கட்சிகளுடைய யோசனையைகோரியுள்ளது. அதற்கு முன்னதாக இந்த விடயத்தில் அரசாங்கம் எவ்விதமான இறுதியான நிலைப்பாட்டை கொண்டிருக்கிறது என்பதை வெளிப்படுத்த வேண்டும். ஜனாதிபதிஅரசியல்கட்சிகளின் யோசனையை கோருவதற்கு முன்னதாக அவர் தலைமையிலான அரசாங்கம்எவ்விதமான இறுதி முடிவை எடுத்துள்ளது என்பதை முதலில் எமக்கு அளிக்க வேண்டும். அதனடிப்படையிலேயே நாம் எமது யோசனைகளை முன்வைக்கமுடியும். 13ஆவது திருத்தச்சட்ட விடத்தில் மட்டும் அரசாங்கம் எதிர்க்கட்சிகளின் யோசனைகளைபெறுவதற்கு முன்னைவது வழமைக்குமாறானதொரு விடயமாகும்.

ஆகவே, இந்த விடயத்தில் அரசாங்கம் தனது யோசனைகளை முன்வைக்கின்ற பட்சத்தில் அது தொடர்பில் நாம் எமது நிலைப்பாடுகளையும் முன்மொழிவுகளையும் வெளிப்படுத்துவதற்குதயாராக இருக்கிறோம். - என்றார். (05)

# 50 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான நுகர்வுக்குப் பொருத்தமற்ற பொருள்கள்

## களஞ்சியசாலைக்குப் பூட்டு

50 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான நுகர்வுக்கு பொருத்தமற்ற அரிசி, கோதுமை மா உள்ளிட்ட உணவுப் பொருள்கள் அடங்கிய களஞ்சியசாலையொன்று நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை அதிகாரிகளால் சனிக்கிழமை சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

வத்தளை, ஹெந்தலையில் உள்ள களஞ்சியசாலை ஒன்றில் இறக்குமதி செய்யப்பட்ட மனித பாவனைக்கு பொருந்தாத சுமார் 80 ஆயிரம் ரின் மீன்கள் மீள்பொதி செய்யப்பட்டு சந்தைக்கு விநியோகம் செய்யப்படவுள்ளதாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம், நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் அவசர சோதனை பிரிவு அதிகாரிகள் சனிக்கிழமைபிற்பகல்குறித்த களஞ்சியசாலைக்கு சென்று இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டுள்ளனர்.

இறக்குமதிசெய்யப்பட்ட காலாவதியான பாசுமதி உள்ளிட்டபல்வேறுவகையான அரிசி வகைகளின் உற்பத்தி செய்யப்பட்ட திகதி மற்றும் காலாவதியான திகதிகளை மாற்றி புதிய பொதி உறைகளுக்கு மாற்றீடு செய்து, சந்தைக்கு விநியோகம் செய்வதற்கு தயாராக இருந்தபோது மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன் பாவனைக்கு பொருத்தமற்ற ஒரு தொகை பருப்பு வகைகளையும் அதிகாரிகள் மீட்டுள்ளனர். மேலும் அவற்றில் காணப்பட்ட பூச்சி இனங்களை இல்லாமல் செய்வதற்கு மனித உடலுக்குப் பொருந்தாத பூச்சிக்கொல்லிகளும் பயன்படுத்தப்பட்டமைதெரியவந்துள்ளது. இதேவேளை குறித்த களஞ்சியசாலையில் காலாவதியான கொத்தமல்லி தொகையினையும் அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் அதிகாரிகள் சம்பந்தப்பட்ட உணவுப் பொருள்களின் மாதிரிகளை எடுத்து பரிசோதனைகளுக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்ததுடன் குறித்த களஞ்சியசாலையை தற்காலிகமாக மூடுவதற்கும் நடவடிக்கை எடுத்தனர்.

இதேவேளை, இவை அனைத்தும் கொழும்பு, நான்காம்குறுக்குத்தெருவில் உள்ள வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமானவை எனத் தெரியவந்துள்ளது.

களஞ்சியசாலையில் உள்ள உணவுப் பொருள்களின் பெறுமதி 50 கோடி ரூபாவுக்கும் அதிகமாகும் எனவும்இதுவரையில்அதிகார சபையால்மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரிய சோதனை நடவடிக்கை இது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# வாகன விபத்தில் தாயும் மகனும் சாவு

கொழும்பில்இடம்பெற்ற வாகன விபத்தில் தாயும் மகனும் உயிரிழந்துள்ளனர் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்தச் சம்பவம் கொழும்பு - மகரகம பிரதேசத்தில் சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு தந்தை படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாரவூர்தி ஒன்றும், கார் ஒன்றும்நேருக்கு நேர்மோதியதில் காரில் சென்றவர்கள் பாதிப்படைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காரைச்செலுத்திச்சென்ற 27 வயதுடைய இளம் பொறியியலாளரும், முன் ஆசனத்தில் அமர்ந்து சென்ற 55வயதுடையஅவரின்தாயாரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காரின் பின் ஆசனத்தில் அமர்ந்து சென்ற 58 வயதுடைய தந்தை படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் விபத்தில் பாரவூர்தியின் சாரதியைக் கைதுசெய்துள்ளபொலிஸார் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (05)

# வைத்தியர்கள் இன்மையால் மூடப்படும் பற்சிகிச்சை பிரிவு

*ஹற்றன்-டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் பற்சிகிச்சை பிரிவு, வைத்தியர்கள் இன்மையால் சுமார் 4 மாதங்களாக குறித்த பிரிவு மூடப்பட்டுள்ளதன் காரணமாக நோயாளர்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.*

*அனைத்து வசதிகளையும் கொண்டுள்ள கிளங்கன் வைத்தியசாலையில் பற்சிகிச்சைப் பிரிவில் கடமையாற்றிய இரண்டு வைத்தியர்கள், 4 மாதங்களுக்கு முன்னர் வெளிநாடு சென்றுள்ளனர்.*

*அதன் பின்னர் குறித்த சிகிச்சை பிரிவுக்கு தற்காலிக மாகநியமிக்கப்பட்டிருந்த பெண் வைத்தியரும் மகப்பேறு விடுமுறையில் சென்றுள்ளதால் குறித்த சிகிச்சைபிரிவு தற்போது மூடப்பட்டுள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.*

*இது குறித்து நுவரெலியா மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் நிஸ்ஸங்க விஜேவர்தன தெரி விக்கையில்-*

*பற் சிகிச்சை பிரிவு மூடப்பட்டுள்ளமை தொடர்பில் வைத்தியசாலையிலிருந்து பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன குறித்த வைத்தியசாலைக்கு, அவி சாவளை ஆதார வைத்தியசாலையின் பற்சிகிச்சை பிரிவில் கடமையாற்றும், வைத்தியர் ஒருவர் டிக்கோயா வைத்தியசாலைக்கு இணைக்கப்பட்டிருந்தாலும், குறித்த வைத்தியசாலையின் பணிப்பாளர் அவரை விடு விக்காமையால், அவர் தற்போது வரை டிக்கோயா ஆதார வைத்தியசாலைக்கு கடமைகளுக்காக சமுகமளிக்கவில்லை எனத் தெரிவித்துள்ளார். (05)*

# சிறுவனை பாலியல் வன்கொடுமை செய்ய முயன்ற பொலிஸார் கைது

சிறுவன் ஒருவனை பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்த முயன்ற ஓய்வுபெற்ற பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் ஏறாவூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பொலிஸ் சார்ஜன்ட் ஏறாவூர் பகுதியைச் சேர்ந்த அறுபத்தொருவயதுடையவர் ஆவார்.

ஏறாவூர் பகுதியிலுள்ள பள்ளிவாசல் ஒன்றில் பலாத்கார முயற்சி இடம்பெற்றதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடு தொடர்பில் ஏறாவூர்; பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் சந்தேகநபர் பொலிஸ் சார்ஜன்ட் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். (05)

# வரட்சியால் குழந்தைகளுக்கு புதியவகை நோய் பரவுகிறது

தற்போது நிலவும் வறண்ட காலநிலையால் குழந்தைகள் மத்தியில் பல்வேறு நோய்கள் பரவுகின்றன என மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர்.

நீர்ச்சத்து குறைபாடு போன்ற நிலைமைகள் இன்றைய நாள்களில் சர்வ சாதாரணமாக காணப்படுவதாகவும் எனவே, குழந்தைகளுக்கு அதிகளவு திரவ உணவுகளை குடிக்கக்கொடுக்க வேண்டும் எனவும் கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் தீபால் பெரேரா குறிப்பிடுகிறார்.

வறண்ட காலநிலையுடன் குழந்தைகளுக்கு வயிற்றுப்போக்கு காய்ச்சல் போன்ற நோய்களும் பரவக்கூடும் என வைத்தியர் தீபால் பெரேரா மேலும் தெரிவித்துள்ளார். (05)

# அனைத்து மலையக எம்.பிக்களையும் ஒரே தடவையில் சந்திப்பார் ஜனாதிபதி

அனைத்து மலையக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் ஒரே தடவையில் சந்தித்து பேச்சு நடத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்துள்ளார் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அமைச்சரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அவர் இணக்கம் தெரிவித்துள்ளார் என்ற அமைச்சரின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

மலையக பெருந்தோட்ட மக்களின் மேம்பாட்டுக்காக 3000 மில்லியன் ரூபாவை வழங்குவதற்கு இந்திய அரசு முன்வந்துள்ளது. எனவே, இந்த நிதியை எந்தெந்த திட்டங்களுக்கு பயன்படுத்த வேண்டும், இது தொடர்பான கட்சிகளின் யோசனைகள் என்ன என்பன உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடவே இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது..

மலையகத்துக்கான முக்கியத்துவமிக்கஅபிவிருத்தி நடவடிக்கைகளின்போது மக்கள் பிரதிநிதிகளை அரவணைத்துக்கொண்டு, அவர்களின் ஆலோசனைகளையும் உள்வாங்கிசெயற்படவே அமைச்சர் ஜீவன் தொண்டமான் எதிர்பார்க்கின்றார். இதற்கான அழைப்பையும் அவர் ஏற்கனவே வெளிப்படுத்தியுள்ளார் - என்று அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.08.2023இல் வெளியிடப்பெற்றது.